


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524









29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

UTHAYAN
# உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00 ☎ 416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

உதயம் 1592 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 9, 2026













## சிங்கள மக்களும் மலர்கள் வைத்து மரியாதை செய்யும் திலீபனின் சிலை அகற்றப்பட்டமை அவர்களது மனங்களையும் புண்படுத்தும் செயலாகும்

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் பொலிசாரிடம் தெரிவிப்பு!



இந்திய - இலங்கை இராணுவங்களுக்கு எதிராகவும், தமிழ் மக்களின் உரிமைக்காகவும் அகிம்சை வழியிலான போராட்டத்தை முன்னெடுத்த, திலீபன் எனப் பரவலாக அறியப்படும் இராசையா பார்த்திபன் 39 ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழக்கும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த, யாழ்ப்பாணம் நல்லூரில் அண்மையில் புதிதாக நிறுவப்பட்ட அவரது வெண்கலச் சிலையை பொலிஸார் அகற்றி எடுத்துச் சென்றமை ஒரு கொடூரமான செயல் என, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் ஒருவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

மேற்படி செயற்பாட்டாளர் பொலிசாரிடம் மேலும் சிங்களத்தில் தெரிவிக்கையில் "யாழ்ப்பாணத்திற்கு வரும் சிங்கள சுற்றுலாப் பயணிகளும் தியாகி தீபன் அவர்களின் உருவச் சிலைக்கு மலர்கள் தூவி வணங்குவதை நீங்கள் தடுத்துவிட்டீர்கள். அது அந்த மக்களை கவலைக்குள்ளாக்கியிருக்கும் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்" என்றார்

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

## "பொற்சதங்கை கலைக்கூடம்" பரதநாட்டிய குரு ஸ்ரீமதி பொன்மதி பத்மவரதன் தனது மாணவ மணிகளோடு இணைந்து வழங்கிய 15வது ஆண்டு விழா!



### ஸ்காபுறோ "தமிழ்ச் சமூக மையத்திற்கு 10,000 டாலர்களை வழங்கி ஒரு முக்கிய பங்காளிகளாக மாறிய குருவின் குடும்பத்தினர், மாணவச் செல்வங்கள் மற்றும் அவர் தம் பெற்றோர்!

"பொற்சதங்கை கலைக்கூட" நிறுவனரும் குருவுமாகிய ஸ்ரீமதி பொன்மதி பத்மவரதனின் நிர்வாகத்தில் இயங்கும் மேற்படி கலைக்கூடம் கடந்த3ம் திகதி சனிக்கிழமை யோர்க்வுட் நூலக கலாச்சார மண்டபத்தில் வழங்கிய அழகிய 15வது ஆண்டு விழா ஆர்ப்பாட்டங்கள் எதுவுமின்றி ஒரு நிகரற்ற நடன விழாவாகவும் பெற்றோர்கள் மற்றும் நடன ஆசிரியைகள் நடன விரும்பிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சங்கமித்த ஒரு தமிழர் விழாவுமாக அமைந்தது.

இங்கே காணப்படும் படத்தில் கலைக்கூடம் வழங்கிய 10000 டாலர்கள் ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தின் பிரதிநிதி ரமணன் சந்திரசேகரமூர்த்தி அவர்களிடம் கையளிக்கப்படுவதைக் காணலாம்.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)










Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 — Annual Subscription Price $52.00
பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — UTHAYAN உதயன் — Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# ஒரே நாளில் யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று அக்கறையோடு மக்களின் முறைப்பாடுகள்,பாடசாலைச் சமூகத்தின் தேவைகள் பற்றி கேட்டறிந்த வடக்கு மாகாண ஆளுநர்!

யாழ்ப்பாண மாகாணத்தை உள்ளடக்கிய வடக்கு மாகாணத்தில் முன்னர் பணியாற்றிய ஆளுனர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் தொடர்பாக அங்கு வாழுகின்ற மக்களுக்கும், கல்வியாளர்கள் மற்றும் சமூக அக்கறை கொண்ட பிரஜைகள் போன்றவர்களுக்கு போதிய திருப்தியில்லா ஒரு நீண்ட காலம் இருந்தது. அப்போது யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஏனைய அருகில் உள்ள மாவட்டங்களையும் பிரதிநிதித்துவம் செய்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்களின் தேவைகளை “கவனிக்க நேரம்” இல்லாவர்கள் போல செயற்பட்டார்கள். குறிப்பாக மன்னார் மாவட்டம், யாழ்ப்பாண மாவட்டம் போன்ற பகுதிக-ளின் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் கொழும்பில் ஆட்சியில் உள்ள தலைவர்களோடு நெருக்கமான நட்பைக் கொண்டிருந்து அவர்களிடமிருந்து சலு-கைகளைப் பெற்றுக்கொண்டு அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் கவ-னமாக இருந்தார்கள்.

குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவின் பதவி பறிபோகும் ஆபத்து பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற ஆயுதமாக சமர்ப்பிக்கப்பட்ட போது தலைவர் சம்பந்தன் மற்றும் அவரை இயக்கியவந்நத சுமந்திரன் போன்றவர்கள் தங்கள் சக பாராளுமன்ற உறுப்பினர்களை ரணிலின் ஆபத்து விலகிச் செல்லும் அளவிற்கு அந்த நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வாக்களித்தார்கள். அந்நேரம் உலகெங்கும் உள்ள தமிழர்கள் “மூக்கில் விரல்களை வைத்து” பார்த்துக்கொண்டிருந்த நேரம் சிங்கள மக்கள் மத்தியில் பல வினாக்கள் தோன்றின. துமிழர்களுக்கோ அன்றி சிங்கள மக்களுக்கோ அன்றி இஸ்லாமிய மக்களுக்கோ நன்மைகளிலும் பார்க்க அநியாயங்களைச் செய் ரணிலுக்கு வாக்களிக்க எவ்வாறு தமிழ் பேசும் எம்பிக்கள் வாக்களித்தார்கள்? அவர்களிடம் கேள்விகளைக் கேட்க மக்களுக்கு தைரியம் இல்லாமல் போய்விட்டதா? என்றெல்லாம் வினாக்களை முன்வைத்தார்கள்.

ஆனால் தனது பதவியை மீண்டும் தொடர்ந்த ரணில் தனது எஞ்சிய பதவிக்காலத்தில் பல தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மதுபான லைசன்ஸ் மற்றும் உணவுப் பொருட்கள் இறக்குமதி லைசன்ஸ் போன்றவற்றை வழங்கினார். இதனாலன் நமது எம்பிக்கள் சுகபோகங்களை அனுபவித்து அவற்றில் சிலர் தகாத செயல்களில் ஈடுபட்டு அந்த விவகாரங்கள் நீதி மன்றம் வரையில் சென்றமை எமது பழைய .அரசியல்வாதிகளின் “கதைகள்”.

இவ்வாறானவர்கள் கொடிய யுத்தத்தில் கொல்லப்பட்ட போராளிகளுக்கோ அன்றி அவர்களின் குடும்பங்களுக்கோ உதவி செய்ய முன்வரவில்லை..

தங்களுக்கு மேலும் என்ன சலுகைகள் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு தங்கள் பதிவிக் காலத்தை “அனுபவித்தார்கள்.”

2009ம் ஆண்டு தொடக்கம் கடந்த பொதுத் தேர்தல் வரையிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பணியாற்றிய உயர் அதிகாரிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் தேவைகளை கவனிக்காமல் அவர்களின் துன்பங்களும் துயரங்களும் அடங்கிய காட்சிகளை “சினிமா” பார்ப்பது போல பார்த்துக் கொண்டிருந்தார்கள். அத்துடன் தங்களுக்குள் “சண்டையும்” பிடித்துக் கொண்டார்கள்.

ஆனால் தற்போது நீண்ட காலமாக அரசாங்க அதிபராகவும் பின்னர் புதிய அரசாங்கத்தால் வட மாகாண ஆளுனராகவும் நியமனம் செய்யப்பெற்ற வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களின் சேவையானது வடக்கு மாகாண மக்களாலும் கொழும்பில் உள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் நிர்வாக அதிகாரிகளினாலும் நன்கு கவனிக்கப்பெறுகின்ற ஒன்றாக விளங்குகின்றது.

இந்நேரத்தில் மற்றுமொரு தமிழ் பேசும் ஆளுனர் ஒருவர் பற்றியும் நாம் இங்கு குறிப்பிட வேண்டும். முன்னாள் ஜனாதிபதியும் சில நிதி மோசடிகள் தொடர்பாக விசாரிக்கப்பட்டவருமான ரணில் விக்கிரமசிங்க அவர்கள் காலத்தில் கிழக்கு மாகாணத்தின் ஆளுனராக நியமனம் செய்யப்பட்ட செந்தில் தொண்டமான் என்பவர் தனது பதவிக்காலத்தில் ஒரு வெளிப்படைத் தன்மை இலலாத நிர்வாகத்தை நடத்தி தானும் பல சுகபோகங்களை அனுபவித்த வண்ணம் பெரும் நிதி மோசடிகள் மற்றும் தனது சகாக்களுக்கு சட்ட விரோதமான முறையில் அரசாங்க காணிகளை வழங்கியமையும் தற்போதைய அநுர அரசாங்கத்தால் கண்டறியப்பட்டுள்ளன.

ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் எவ்வாறு யுத்தகாலத்தில் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பஞ்சலிங்கம் அவர்கள் ஒரு இரண்டாம் நிலை அதிகாரிபோல வீதிகளில் இறங்கி மக்களுக்காக சேவையாற்றினாரோ அதனிலும் அதிகமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஒருவராக ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் மக்களாலும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களாலும் நேசிக்கப்படுகின்றார்.

அவரது பணிகள் எப்போதும் மக்கள் சார்ந்து பாடசாலைக் கல்வி சார்ந்தும் தொழில் முனைவோரது முன்னேற்றம் கருதியும் இடம்பெறுவதும் அவரது பணி தொடர்பான விஜயங்கள் அர்ப்பணிப்போடும் கவனிப்போடும் மேற்கொள்ளப்படுகின்றன என்பது நன்கு வெளிப்படையாகவே தெரிகின்றன.

இந்த வாரத்தில் அவர் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் நேற்று 8ம் தி திகதி வியாழக்கிழமை களப் பயணத்தை மேற்கொண்டு, மக்கள், பாடசாலை சமூகம் மற்றும் முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நேரில் கேட்டறிந்த விடயம் தற்போது கொழும்பில் உள்ள உயர் அரச அதிகாரிகள் பாராட்டும் ஒரு விடயமாக உள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

அல்லைப்பிட்டி மற்றும் சுழிபுரம் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் முதலீட்டுச் செயற்பாடுகளை ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார்.

அல்லைப்பிட்டியில் அமைக்கப்பட்டு வரும் அல்லை விலாஸ் முதலீட்டுத் திட்டத்தையும் ஆளுநர் பார்வையிட்டார். இத்திட்டத்தை முன்னெடுப்பதில் ஏற்பட்டிருந்த சில தாமதங்கள் முன்னதாக ஆளுநரின் தலையீட்டின் மூலம் தீர்க்கப்பட்டிருந்த நிலையில், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் அவற்றின் மூலம் குறித்த பிரதேசத்துக்கும் வடக்கு மாகாணத்துக்கும் கிடைக்கக்கூடிய பயன்கள் தொடர்பில் முதலீட்டாளர் சண்முகநாதன் சுகந்தனால் ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆளுநர் கல்லுண்டாய் மக்கள் குடியிருப்புப் பகுதிக்குச் சென்றார். வடக்கு மாகாண கௌரவ ஆளுநரின் விசேட பணிப்பின் பேரில் ஒதுக்கப்பட்ட 10 மில்லியன் ரூபா நிதியில், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையால் தாழ்நிலப் பகுதிகளுக்கு மண் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதை ஆளுநர் நேரில் பார்வையிட்டார்.

இதன்போது அங்கு வசிக்கும் மக்கள், தாங்கள் 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டிருந்தபோதிலும், அதன் பின்னர் நீண்டகாலமாக மண் நிரவுதல் உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்தனர். தற்போது அவை முன்னெடுக்கப்படுவதற்கு நன்றியும் தெரிவித்த அவர்கள், வீடுகளில் காணப்படும் சில திருத்தப் பணிகளையும் மேற்கொடுக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர். மக்களின் கோரிக்கைகளை நேரில் கேட்டறிந்த ஆளுநர், நிலவரங்கள் தொடர்பில் உரிய முறையில் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி மற்றும் அரா-லி முருகமூர்த்தி வித்தியாலயம் ஆகியவற்றுக்குச் சென்ற ஆளுநர், அங்குள்ள கட்டடத் தேவைகள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாடசாலைகளின் ஏனைய தேவைகள் தொடர்பில் அதிபர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினரிடம் நேரில் கேட்டறிந்தார். இந்த விஜயமானது ஆளுனர் அவர்கள் கல்வி சார் நடவடிக்கைகள் சரியாக இடம்பெற வேண்டும் என்பதை உன்னிப்பாக கவனிக்கின்றார் என்பதை பறைசாற்றுகின்றது. தொடர்ந்து சில பாடசாலைகளின் அத்தியாவசிய தேவைகளை அடையாளம் கண்டு அவற்றை முன்னுரிமை அடிப்படையில் கையாள வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இவ்வாறு தற்போதைய வடக்கு மாகாண ஆளுனர் அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மாத்திரமல்ல தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் எவ்வித தளர்வும் இன்றி விஜயங்களை மேற்கொண்டு அனைத்தையும் நேரடியாகக் கவனம் செலுத்துவதை பாதிக்கப்பட்ட எமது மக்கள் நன்றியுடன் நோக்குகின்றார்கள் என்பதும் நிஜமே!




இனிய நவராத்திரி
நல்வாழ்த்துகள்!
துர்க்கையின் துணிவும்,
இலக்குமியின் வளமும்,
சரஸ்வதியின் ஞானமும்
உங்கள் வாழ்வில் பெருகட்டும்.
LOGAN KANAPATHI
MPP for Markham-Thornhill
PA to the Minister of Red Tape Reduction
NEED HELP WITH A PROVINCIAL ISSUE? CONTACT ME!
TEL: 905 - 305 - 1935
E-MAIL: LOGAN.KANAPATHICO@PC.OLA.ORG
WEBSITE: WWW.LOGANKANAPATHI.CA
ADDRESS: 7380 MCCOWAN ROAD, UNIT3, MARKHAM, ON L3S 3H8
Logan_Kanapathi
Logan Kanapathi
logankanapathi
LoganKanapathi


Brad Bradford for Mayor
The Three Cs
Fight Crime
Fix Congestion
Reduce Your Costs
#5
On the ballot
BRAD BRADFORD
ஒக்டோபர் 26ம் திகதி உங்கள் வாக்குகளை வழங்கி அவரைத் தேர்ந்தெடுங்கள்!
உண்மையான மாற்றம்!
உண்மையான பெறுபேறுகள்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சிங்கள மக்களும் மலர்கள் வைத்து மரியாதை செய்யும் திலீபனின் சிலை அகற்றப்பட்டமை அவர்களது மனங்களையும் புண்படுத்தும் செயலாகும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் பொலிசாரிடம் தெரிவிப்பு!



இந்திய - இலங்கை இராணுவங்களுக்கு எதிராகவும், தமிழ் மக்களின் உரிமைக்காகவும் அகிம்சை வழியிலான போராட்டத்தை முன்னெடுத்த, திலீபன் எனப் பரவலாக அறியப்படும் இராசையா பார்த்திபன் 39 ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழக்கும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த, யாழ்ப்பாணம் நல்லூரில் அண்மையில் புதிதாக நிறுவப்பட்ட அவரது வெண்கலச் சிலையை பொலிஸார் அகற்றி எடுத்துச் சென்றமை ஒரு கொடூரமான செயல் என, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் ஒருவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

"நான் ஒரு விடயத்தைத் தெளிவாகக் கூறினேன். அந்தச் சிலையை அங்கிருந்து அகற்றியமை பொலிஸார் மேற்கொண்ட ஒரு மோசமான செயலாகும். இங்குள்ள தியாக தீபம் திலீபனின் ஆவணக் காப்பகத்திற்கு தமிழ் மக்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களும் வருகின்றனர். அவர்கள் திலீபன் அண்ணாவின் பாதத்தில் மலர்களை வைத்து மரியாதை செலுத்தினர். சிங்கள மக்கள் என்னிடம் முன்வைத்த மிக முக்கியமான கோரிக்கை என்னவென்றால், திலீபனின் வாழ்க்கை வரலாறு தமிழில் இருப்பதைப் போலவே, அதை சிங்கள மொழியிலும் மொழிபெயர்க்க வேண்டும் என்பதாகும்."

அண்மையில் நல்லூரில் திலீபனின் சிலை புதிதாக நிறுவப்பட்டமை தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது, "சிலையை அகற்றியமை தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?" என யாழ்ப்பாண பொலிஸார் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னணி செயற்பாட்டாளரும், திலீபன் நினைவேந்தல் குழுவின் உறுப்பினருமான வரதராஜா பார்த்தீபன், அதிகாரிகளிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

திலீபனின் சிலையை அந்த இடத்திலிருந்து அகற்றியமை தமிழ் மக்களின் மனங்களை மட்டுமன்றி, இந்த மண்ணில் வாழும் சிங்கள மக்களின் மனங்களையும் புண்படுத்தும் செயல் என, பொலிஸ் அதிகாரிகளின் விசாரணையின்போது தான் தெரிவித்ததாக வரதராஜா பார்த்தீபன் ஊடகவியலாளர்களிடம் மேலும் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரால் ஒரு வாரத்திற்கு முன்னர் அகற்றிச் செல்லப்பட்ட திலீபனின் சிலை, யாழ்ப்பாணம் பொலிஸாரால் வழக்குப் பொருளாக கடந்த திங்கட்கிழமை (ஒகஸ்ட் 5) யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. இந்த வழக்கை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை எதிர்பார்த்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளதாக, பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

"தியாக தீபம்" என தமிழ் மக்களால் போற்றப்படும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் லெப்டினன்ட் கேர்ணல் இராசையா பார்த்திபனை நினைவுகூரும் வகையில், அவரது 39ஆவது நினைவு ஆண்டு காலப்பகுதி ஆரம்பமான செப்டெம்பர் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூரில் சிலை நிறுவப்பட்டது. இந்தச் சிலையை நிறுவியது யார் என்பது தொடர்பான தகவல்களை இதுவரை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க பொலிஸாரால் முடியவில்லை.

இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட நான்கு பேரை ஒக்டோபர் 5ஆம் திகதி யாழ்ப்பாணம் பொலிஸார் அழைத்திருந்ததாக பிராந்திய ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் நல்லூரில் புதிதாக திலீபனுக்கு சிலையை நிறுவியது யார் என்பது தொடர்பில் பொலிஸார் தம்மிடம் விசாரணை நடத்தியதாக, பொலிஸார் விடுத்த அழைப்பின் பேரில் அங்கு சென்று வாக்குமூலம் வழங்கிய பின்னர், திலீபன் நினைவேந்தல் குழுவின் உறுப்பினரான வரதராஜா பார்த்தீபன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

"அந்தச் சிலையை நிறுவியது யார் என்பது தொடர்பில் எங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், அது தொடர்பான தகவல்களைப் பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக மட்டுமே நாங்கள் பார்த்தோம் என்றும், அந்தச் சிலை நிறுவப்பட்டபோது நாங்கள் அங்கு இருக்கவில்லை என்றும், அது தொடர்பில் எங்களில் யாருக்கும் எதுவும் தெரியாது என்றும் தெரிவித்தோம். இந்தச் சிலையை நிறுவியவர்கள் யார் என்பது குறித்தும் எங்களில் யாருக்கும் எதுவும் தெரியாது என்றும் தெரிவித்தோம்."

கடந்த மூன்று ஆண்டுகளாக திலீபன் நினைவேந்தல் வாரத்தில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் கண்காட்சி தொடர்பிலும் பொலிஸார் தம்மிடம் விசாரணை நடத்தியதாக அவர் கூறினார்.

"2023ஆம் ஆண்டு முதல் கடந்த நான்கு ஆண்டுகளாகத் திலீபனின் ஆவணக் காப்பகத்தை உரிய அனுமதிகளைப் பெற்றுக்கொண்டு நாங்கள் முறையாக நடத்தி வருகிறோம். இது தொடர்பிலும் ஒரு விடயத்தைத் தெளிவாகக் கூறினோம். 2023ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை திலீபனின் ஆவணக் காப்பகத்தை நடத்துவதில் பொலிஸார் எவ்வித தலையீட்டையும் மேற்கொள்ளவில்லை. எந்தவொரு விசாரணையையும் நடத்தவில்லை. அதேபோன்று, ஆவணக் காப்பகத்தை தொடர்ந்து நடத்துவதற்கு அவர்கள் அனுமதி வழங்கும் வகையிலேயே செயற்பட்டு வந்துள்ளனர் என்பதையும் நாங்கள் அவர்களிடம் சுட்டிக்காட்டினோம்."

திலீபன் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய கண்காட்சியை



நடத்துவதற்குத் தேவையான நிதியை எவ்வாறு திரட்டுகின்றனர் என்பது தொடர்பிலும், திலீபன் நினைவேந்தல் குழுவின் உறுப்பினரான வரதராஜா பார்த்தீபனிடம் பொலிஸ் அதிகாரிகள் மேலும் விசாரணை நடத்தியுள்ளனர்.

"இது தொடர்பில் ஒரு விடயத்தை நான் தெளிவாகக் கூறினேன். 2023ஆம் ஆண்டு முதல் திலீபனின் ஆவணக் காப்பகத்திற்காக நாங்கள் எந்தவொரு வெளிநாட்டிலிருந்தும் நிதியைப் பெற்றுக்கொள்ளவில்லை. எமது தாயகத்தில், எனது சொந்தப் பணத்தையும், எமது சட்டத்தரணி மணிவண்ணனின் சொந்தப் பணத்தையும் பயன்படுத்தியே திலீபனின் ஆவணக் காப்பகமும் கண்காட்சியும் நடத்தப்பட்டு வருகின்றன. எந்தவொரு வெளிநாட்டிலிருந்தும் நிதி திரட்டவோ அல்லது வெளிநாட்டு நிதியுதவியைப் பெற்றுக்கொண்டோ இந்த நிகழ்ச்சியை நடத்தவில்லை என்பதையும் நான் தெளிவாகக் கூறினேன்."

திலீபன் எனப் பரவலாக அறியப்படும் இராசையா பார்த்திபன், 39 ஆண்டுகளுக்கு முன்னர் உயிரிழக்கும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்த, அவரது சிலையை பொலிஸார் அகற்றிச் சென்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் செப்டெம்பர் 28ஆம் திகதி திங்கட்கிழமை போராட்டங்கள் நடத்தப்பட்டன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் தலைமையில், தமிழ் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் ஆதரவுடன் நடைபெற்ற இந்தப் போராட்டங்களில், திலீபனின் சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவ வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

தமிழ் மக்களின் விடுதலைக்காக அகிம்சை வழியிலான போராட்டத்தில் ஈடுபட்டு உயிரைத் தியாகம் செய்ததன் காரணமாக இராசையா பார்த்திபனை நினைவுகூரும் வகையில், நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த திலீபனின் நினைவுச்சின்னம் 2010ஆம் ஆண்டு அரச பாதுகாப்புப் படையினரால் இடித்து அழிக்கப்பட்டிருந்தது. அந்த நினைவுச்சின்னம் அமைந்திருந்த இடத்தில் புதிதாக சிலையொன்று நிறுவப்பட்டு, அவரது 39ஆவது நினைவு தினம் செப்டெம்பர் 15ஆம் திகதி பெருமளவான மக்கள் பங்கேற்புடன் மலர் அஞ்சலி செலுத்தி நினைவுகூரப்பட்டது.

செப்டெம்பர் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை அந்த இடத்திற்கு வந்த பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று, புதிதாக நிறுவப்பட்டிருந்த சிலையை அங்கிருந்து அகற்றிச் செல்ல நடவடிக்கை எடுத்திருந்தது.

இது தொடர்பில் பொதுமக்களிடமிருந்து எதிர்ப்புகள் எழுந்ததைத் தொடர்ந்து, செப்டெம்பர் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (TNPF) உறுப்பினர் சேதுகாவலர் மதுசிகான் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக, குறித்த நினைவுச்சின்னத்தை செப்டெம்பர் 26ஆம் திகதி வரை மாத்திரம் தற்காலிகமாக அந்த இடத்தில் நிறுவுவதற்கு, அனைத்து கட்சிகளின் அனுமதியுடன் யாழ்ப்பாண மாநகர சபை அனுமதி வழங்கியிருந்ததாக அவர் தெரிவித்திருந்தார்.

செப்டெம்பர் 21ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட விளக்கமொன்றைத் தொடர்ந்து கிடைத்த நீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலேயே பொலிஸார் இந்தச் சிலையை அகற்றியதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

"சிலை வழக்குப் பொருளாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது" என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நலிந்த ஜயதிஸ்ஸ, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது அண்மையில் தெரிவித்திருந்தார்.

பயங்கரவாத அமைப்பொன்றை ஊக்குவிப்பது தொடர்பான சட்டத்தின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக ஊடகத்துறை அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். கடந்த காலங்களில் தெற்கில் இடம்பெற்ற போராட்டக்காரர்களை ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராகப் போராடிய ஆரம்பகால போராட்டக்காரர்களில் ஒருவராக திலீபனும் இருந்தார்.

சிங்கள இராணுவ முகாம்களைத் தமிழ் பிரதேசங்களில் இருந்து அகற்றுதல், தமிழ் மக்களின் பிரதேசங்களில் இடைக்காலத் தமிழ் அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் வரை புனர்வாழ்வு நடவடிக்கைகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துதல், தமிழ் மக்களுக்கு சொந்தமான கிராமங்கள் மற்றும் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதை நிறுத்துதல், தமிழ் பிரதேசங்களில் சிங்கள பொலிஸ் நிலையங்களை அமைப்பதை நிறுத்துதல் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைத் தலைமையகங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் திகதி திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். எனினும் திலீபன் செப்டெம்பர் 26ஆம் திகதி கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் உயிரிழந்தார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் கத்தியால் குத்தி இளம் குடும்பப் பெண் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தடயவியல் பொலிஸ் தீவிர விசாரணை

**ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பப் பெண் கத்தியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் தடயவியல் பொலிஸார் தீவிரமாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர் கோவில் வீதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து சமையல் கலைஞரான ஒரு ஒரு பெண்ணை கத்தியால் வெட்டிக் படுகொலை செய்துவிட்டு, அவரது தாயாரையும் காயப்படுத்திவிட்டுத் தப்பியோடிய இளைஞர் ரயில் முன்பாய்ந்து தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சமையல் கலைஞரான ஆன் லக்ஷா இக்னேஷியஸ் (வயது 32) என்ற ஒரு பிள்ளையின் தாயாரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரைக் கொலை செய்த பின்னர் ரயில் முன்பாய்ந்து உயிரை மாய்த்தவர் கிளிநொச்சி, பரந்தன் சிவபுரம் பகுதியைச் சேர்ந்த தேவதாஸ் புகழரசன் (வயது 23) என்ற இளைஞராவார்.

கடந்த 5ம் திகதி திங்கட்கிழமை இரவு நல்லூர் கோவில் வீதியில் உள்ள மேற்படி பெண்ணின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த இளைஞர், அங்கிருந்த ஆன் லக்ஷா இக்னேஷியஸ் மீது சரமாரியாகக் கத்தித் தாக்குதல் நடத்தியுள்ளமையுடன் அவரது தலைமுடிகளையும் கத்தியால் அறுத்துக் கொடூரமான முறையில் தாக்குதலை நடத்தியுள்ளார். இதில் அந்தப் பெண் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.



தாக்குதலைத் தடுக்க முயன்ற அந்தப் பெண்ணின் தாயார் மீதும் அந்த இளைஞர் கத்தித் தாக்குதல் நடத்தியுள்ளார். படுகாயமடைந்த தாயார் உடனடியாக மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



தாக்குதலைத் தொடர்ந்து கத்தியுடன் அங்கிருந்து தப்பிய அந்த இளைஞர், அரியாலைப் பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இரவுத் தபால் ரயில் முன் பாய்ந்து தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

கொலையுண்ட பெண் சமையல் கலைஞராக வேலை செய்யும் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நட்சத்திர விடுதியில், மேற்படி இளைஞரும் சமையல் கலைஞர் படிப்பை நிறைவு செய்து பயிற்சி சமையல் கலைஞராக வேலை செய்து வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர்களுக்கிடையில் நட்பு இருந்திருக்கலாம் என்றும், அதன் அடிப்படையில் இந்தக் கொலை நடைபெற்றுருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்த பெண்ணின் கணவன் கடந்த 2021 ஆம் ஆண்டு தனது உயிரை மாய்த்துள்ள நிலையில், அந்தப் பெண் மறுமணம் செய்யாமல் தனது பெண் குழந்தையுடன் வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பவம் இடம்பெற்ற வீட்டில் தடயவியல் பொலிஸார் தீவிர சோதனைகளை முன்னெடுத்துள்ளமையுடன், உயிரிழந்த பெண்ணின் சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் சிவஞானத்தின் உரையை ஹன்சாட்டில் இருந்து நீக்கக் கோரி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பி. சானக மாதுகொட அந்த கோரிக்கை!

நாடாளுமன்றத்தில் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அந்நியச் செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் ஆற்றிய உரை தொடர்பில் சபையில் சர்ச்சை எழுந்துள்ளது.

ஸ்ரீதரன் எம்.பியின் உரையில் உள்ள விடுதலைப்புலிகள் தொடர்பான விடயங்களை ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறுசபாபீடத்துக்குத் தலைமை தாங்கிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பி. சானக மாதுகொட அந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

விவாதத்தின் போது உரையாற்றிய சிறீதரன் எம்.பி., தியாக தீபம் திலீபனின் சிலை அகற்றப்பட்டமை, அதனால் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள எதிர்ப்பு மற்றும் கவலைகள், அரசின் தமிழர் விரோத நடவடிக்கைகள், விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கத்தின் அவசியம் மற்றும் நாட்டில் நல்லிணக்கம் மலர அரசு செய்ய வேண்டியவை குறித்து மிகவும் உணர்வுபூர்வமாகக் கருத்துக்களை முன்வைத்தார்.



ஸ்ரீதரன் எம்.பியின் உரைக்குப் பிறகு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பி. சானக மாதுகொட அந்த, நாடாளுமன்றத்தில் இனங்களுக்கிடையே பிரச்சினைகளையும் பிளவுகளையும் ஏற்படுத்தும் வகையில் கருத்துக் கூறுவது அரசமைப்பை மீறும் செயல் எனக் குறிப்பிட்டு, அவரது உரையை ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறு கோரினார்.



# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள விளையாட்டுப் போட்டி

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



(06-08-2026)

மன்னார் மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட தடகள விளையாட்டுப் போட்டி 6ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

சமூக சேவைகள் திணைக்களமும் மன்னார் மாவட்டச் செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த விளையாட்டு நிகழ்வில் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் எம் பிரதீப் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.

மேலும் அருட்தந்தை, மேலதிக அரசாங்க அதிபர் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



வெற்றி பெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதுடன் பங்கு பற்றிய மாற்றுத் திறனாளிகளுக்கும் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டது.

கனடிய செய்திகள் Canadian News

## Seminar on 'Empowering Indian Women in Canada', hosted by Consulate General of India, Toronto!

# "கனடாவில் இந்தியப் பெண்களுக்கு அதிகாரத்தை வழங்குதல்" தொடர்பான கருத்தரங்கை ஏற்பாடு செய்த ரொறன்ரோ இந்தியத் துணைத் தூதரகம்




கனடாவில் உள்ள இந்தியப் பெண்களுக்குக் கிடைக்கும் ஆதரவு வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, பெண்கள், சமூக அமைப்புகள், சட்ட மற்றும் ஆலோசனை வல்லுநர்கள் மற்றும் பிற பங்குதாரர்களை ஒன்றிணைத்து, ரொறன்ரோவில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம் அக்டோபர் 5, 2026 அன்று "கனடாவில் இந்தியப் பெண்களுக்கு அதிகாரத்தை வழங்குதல்" என்ற தலைப்பில் ஒரு சிறப்புக் கருத்தரங்கை ஏற்பாடு செய்தது. கடினமான அல்லது துன்பகரமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் பெண்களுக்கு சட்ட, உளவியல் சமூக, தூதரக மற்றும் சமூக ஆதரவு சேவைகளை எளிதாக்குவதற்காக, டிசம்பர் 2025-ல் ரொறன்ரோவில் தொடங்கப்பட்ட இந்திய அரசின் ஒரு முயற்சியான பெண்களுக்கான ஒற்றை நிறுத்த மையத்தை (OSCW) இந்தக் கருத்தரங்கு முன்னிலைப்படுத்தியது.

பீல் பிராந்திய காவல்துறையின் பிரதிநிதிகள், பெண்களுக்கான ஒற்றை நிறுத்த மையத்துடன் தொடர்புடைய சட்ட மற்றும் ஆலோசனை வல்லுநர்கள், மற்றும் பெண்கள் நலன், சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள் ஆகிய துறைகளில் பணியாற்றும் முன்னணி சமூக அமைப்புகள் இந்தக் கருத்தரங்கில் ஒன்றிணைந்தனர். இந்த நிகழ்வில் இந்தியப் பெண்கள், சர்வதேச மாணவர்கள், மகளிர் குழுக்கள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், அத்துடன் பெண்களுக்கு ஆதரவளிக்கப் பணியாற்றும் தனிநபர்களும் கலந்துகொண்டனர். பங்கேற்பாளர்கள் வழக்கறிஞர்கள், ஆலோசகர்கள், காவல்துறைப் பிரதிநிதிகள் மற்றும் சமூக சேவை வல்லுநர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடி, கிடைக்கக்கூடிய ஆதரவு, வளங்கள் மற்றும் உதவிக்கான வழிகள் குறித்த மதிப்புமிக்க தகவல்களைப் பெற்றனர்.

இந்த நிகழ்ச்சி ஆரம்பத்தில் துர்க்கைக்கான வழிபாட்டுப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து, ரொறன்ரோவில் உள்ள இந்தியத் துணைத் தூதர் திரு. மகாவீர் சிங்வி உரையாற்றினார். அவர், "கடினமான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் பெண்கள் ஆதரவின்றி விடப்படாமல் இருப்பதை உறுதி செய்வதில் இந்திய அரசின் அர்ப்பணிப்பை "பெண்களுக்கான ஒற்றை நிறுத்த மையம்" (One Stop Centre for Women) பிரதிபலிக்கிறது. உதவியைப் பெறுவதற்கான முதல் மற்றும் மிக முக்கியமான படி விழிப்புணர்வு ஆகும். இந்த முயற்சியின் மூலம், கனடாவில் உள்ள இந்தியப் பெண்கள் தங்களுக்குத் தேவைப்படும்போது சட்ட வழிகாட்டுதல், ஆலோசனை, தூதரக உதவி மற்றும் சமூக ஆதரவுக்காக எங்கு செல்வது என்பதை அறிந்துகொள்வதை உறுதிசெய்ய நாங்கள் முயல்கிறோம். இந்த வளங்களை மேலும் எளிதில் அணுகக்கூடியதாக மாற்றுவதற்கும், இந்தியப் பெண்களுக்குக் கிடைக்கும் ஆதரவு வலையமைப்பை வலுப்படுத்துவதற்கும் எங்கள் சமூகப் பங்காளிகளுடன் இணைந்து பணியாற்றுவதில் தூதரகம் உறுதியாக உள்ளது" என்று கூறினார்.






இந்தக் கருத்தரங்கம், பெண்களுக்கான ஒற்றை நிறுத்த மையத்தை (OSCW) அறிமுகப்படுத்தியதுடன், முழுஊறு மற்றும் அதன் கூட்டாளர் அமைப்புகள் மூலம் கிடைக்கக்கூடிய பாதுகாப்பு, சட்ட, உளவியல் மற்றும் சமூக ஆதரவு வழிமுறைகள் குறித்து இந்திய சமூகம், குறிப்பாகப் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தியது. பீல் பிராந்திய காவல்துறையினரால் "பெண்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு" அமர்வு ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தனிப்பட்ட பாதுகாப்பு, அபாயங்கள் குறித்த விழிப்புணர்வு, கிடைக்கக்கூடிய ஆதரவு சேவைகள், மற்றும் உள்ளூர் சட்ட அமலாக்கம் மற்றும் சமூக வளங்களை அணுகுவதற்கான நடைமுறை வழிகாட்டுதல்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தியது. சட்ட மற்றும் மனநல நிபுணர்களுடன் நடைபெற்ற ஒரு கலந்துரையாடல் மற்றும் கேள்வி-பதில் அமர்வில், சட்ட உரிமைகள், சட்ட உதவி, ஆலோசனை மற்றும் உளவியல் சமூக ஆதரவு, சமூக வளங்கள் மற்றும் உதவிக்கான வழிகள் ஆகியவை விவாதிக்கப்பட்டன. இது இந்தியப் பெண்கள் தகுந்த ஆதரவை நன்கு புரிந்துகொள்ளவும், வழிநடத்தவும் மற்றும் அணுகவும் வலுவூட்டியது. இந்த நிகழ்வில், சர்வதேச மாணவர்கள் எதிர்கொள்ளும் பாலியல் கடத்தல் அபாயங்களை எடுத்துக்காட்டும் ஒரு விழிப்புணர்வு நாடகமும் இடம்பெற்றது. இது எச்சரிக்கை அறிகுறிகளை அடையாளம் காண்பதன் முக்கியத்துவத்தையும், OSCW மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து சரியான நேரத்தில் ஆதரவைப் பெறுவதன் அவசியத்தையும் வலியுறுத்தியது. இந்நிகழ்வு, பங்கேற்றவர்கள் மற்றும் பங்களிப்பாளர்கள் அனைவருக்கும் பாராட்டு தெரிவித்து நிறைவடைந்தது.

ரொறன்ரோவில் உள்ள இந்தியத் துணைத் தூதரகம், அரசாங்க நிறுவனங்கள், தொழில்முறை சேவை வழங்குநர்கள் மற்றும் சமூக அமைப்புகளுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதன் மூலம், இந்தியப் பெண்களுக்கு வலுவூட்டுவதிலும், கனடாவில் உள்ள பரந்த இந்தியப் புலம்பெயர்ந்தோருக்கு ஆதரவளிப்பதிலும் உறுதியாக உள்ளது. இதன் மூலம் விழிப்புணர்வை மேம்படுத்தவும், தகுந்த உதவி மற்றும் ஆதரவை சரியான நேரத்தில் அணுகுவதை எளிதாக்கவும் முடிகிறது.

பெண்களுக்கான ஒன் ஸ்டாப் மையம் (OSCW), ரொறன்ரோவில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்திலிருந்து செயல்படுகிறது. இதன் மைய நிர்வாகி, +1 (437) 552-3309 என்ற உதவி எண் மற்றும் osc.toronto@mea.gov.in என்ற மின்னஞ்சல் வழியாக 24/7 மணி நேரமும் தொடர்பில் இருப்பார்.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*

# கனடாவில் வாழும் மாவீரர்களின் குடும்பங்கள் தொடர்பான விபரங்களை திரட்டும் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவவீரர்கள் குடும்பங்கள் தொடர்பான விபரஙகளையும், மாவீரர்களது பெற்றோர்கள், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது.

கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர், தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரர்களின் குடும்பத்தினர், புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம்.

போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றது.

மேலதிக விபரங்களுக்கு இங்குள்ள அறிவித்தலைப் பார்க்கவும்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழரசுக் கட்சியைக் களங்கப்படுத்த திட்டமிட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மீது சி.வி.கே. சிவஞானம் குற்றச்சாட்டுகின்றார்

**சி.வி.கே. சிவஞானம் அவர்களது தற்போதைய அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக கருத்துக்களை பதிவு செய்துள்ள யாழ்ப்பாணத்தின் புத்திஜீவிகள் சிலர் அவர் சில வருடங்களுக்கு அரசியலை விட்டு ஒதுங்கியிருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவர்கள் மேலும் தங்கள் சமூக ஊடகப் பக்கங்களில் தெரிவித்துள்ள விடயங்களில் சி.வி.கே. சிவஞானம் அவர்கள் யாழ்ப்பாணம் மாநகர சபையில் ஆணையாளராக 25 ஆண்டுகளுக்கு முன்னர் பணியாற்றிய பல வருடங்கள் அவர் ஒரு நேர்மையான உயர் அதிகாரியாக விளங்கினார். நியாயங்களுக்காகவும் நேர்மைக்காகவும் வாதாடிய அவர் தற்போது அரசியல் பதவிகளைப் பெற்று மாகாண சபையில் பணியாற்றத் தொடங்கிய காலம் தொடக்கம் “நேர்மையற்ற ஒருவராக” காட்சியளிக்கின்றார். குறிப்பாக சுமந்திரன் மற்றும் சுரேஷ் பிரேமச் சந்திரன் ஆகியோரோ இரகசிய பேச்சுவார்த்தைகளிலும் அவதூறு பரப்பும் வேலைகளிலும் தற்போது ஈடுபட்டு வருகின்றார். எனவே அவர் தமிழர் அரசியலிலிருந்து சில வருடங்கள் ஒய்வெடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார்கள்.**

---------------------------------------

**ந.லோகதயாளன்.**

தியாக தீபம் திலீபனின் சிலைக்கு எதிரான ஓர் ஆள் நானாகத்தான் இருக்க வேண்டும் எனச் சித்தரிப்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திட்டமிட்ட செயலாகும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக சுமந்திரன் அவர்களால் நியமிக்கப்பட்ட சி.வி.கே. சிவஞானம் குற்றம் சுமத்தியுள்ளார். இது தன் மீது மட்டுமல்ல, இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் திட்டமிட்டுக் களங்கப்படுத்துகின்ற செயல் என்றும் அவர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: “நானும் தமிழரசுக் கட்சியும் இந்தச் சிலை வைப்புக்கு எதிரானவர்கள் என்றும், பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு நாங்கள் துணைபோனோம் அல்லது எங்கள் கோரிக்கைக்கு அமையவே பொலிஸார் நடவடிக்கை எடுத்தார்கள் என்றும் அபாண்டமான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

திலீபனின் சிலையைப் பொலிஸார் எடுத்ததற்கும் எங்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. பொலிஸார் யாழ். மாநகர மேயரிடம் நீங்கள் சிலையை அகற்றுவீர்களா எனக் கேட்டபோது, மாநகர மேயர் நாங்கள் அகற்றமாட்டோம் என்றே தெரிவித்தார். நாங்கள் சொல்லி பொலிஸ் செய்யுமா? அவ்வளவு சக்தி வாய்ந்தவர்கள் நாங்கள் என்றால், எங்கள் கட்சிக்கு எதிராகப் பல வழக்குகள் போடப்பட்டுள்ளதே, அவற்றை எங்களால் தடுத்திருக்கலாமே? இது முற்றிலும் சாத்தியமற்றது.



கடந்த 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்தத் தூபியைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைத்து, 10 அடி சுற்றளவுக்கு அதனைத் திருத்தி அமைக்கலாம் என்ற கோரிக்கையை நான்தான் அப்போதைய வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வைத்தேன். அப்படிப்பட்ட ஒருவன் இந்தச் சிலை வைப்பை எதிர்க்க வேண்டிய தேவையும் இல்லை. எமது கட்சியும் எதிர்க்க வேண்டிய அவசியமும் இல்லை. தியாகி திலீபன் நினைவேந்தலுக்கு நாங்கள் மாறானவர்கள் என்று சித்தரிப்பது நியாயத்துக்கு அப்பாற்பட்டது.

மேலும், 2015ஆம் ஆண்டில் முதலாவதாக அந்த இடத்தைத் துப்புரவு செய்து நிகழ்வை நடத்தியது ஜனநாயகப் போராளிகள் கட்சியாகும். 2016ஆம் ஆண்டிலும் அவர்கள்தான் செய்தனர். அவர்களுக்கு அந்த உதவியைச் செய்தவன் நான்தான். ஆனால், இன்று தமிழரசுக் கட்சியை அழிப்பதே தங்களது நோக்கம் என்று கூறிக்கொண்டு, திலீபன் நினைவேந்தலையும் தங்களது சுயநல அரசியலுக்காகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பயன்படுத்தி வருகின்றது.

திலீபன் தியாக வேள்வியில் ஆகுதியானவன் என்பது எல்லோருக்கும் தெரியும் அவரைக் கொண்டாடுவது அனைவருக்கும் திருப்தியான விடயம். ஆனால், தாங்கள்தான் எல்லாம் செய்யலாம், தங்களது கட்சிதான் அதற்கு ஏகபோகக் குத்தகைதாரர்கள், தாங்கள்தான் “புலி வாரிசுகள்” என்றெல்லாம் மற்றவர்களைச் சித்தரிக்க முடியாது. தாமாகவே பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு திலீபன் நினைவஞ்சலிக் குழுவே அங்குள்ளது. அதில் தமிழரசுக் கட்சி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ போன்ற ஏனைய தமிழ்க் கட்சிகள் இடம்பெறவில்லையே ஏன்?

2015, 2016, 2017 காலப்பகுதிகளில் இந்த நிகழ்வுகளை முன்னெடுத்த ஜனநாயகப் போராளிகள் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட இன்று அந்த இடத்துக்கு வரவில்லை. உங்களோடு முரண்படக் கூடாது என்பதற்காகவும், திலீபனின் தியாகம் கொச்சைப்படுத்தப்படக் கூடாது என்பதற்காகவுமே நாங்கள் ஒதுங்கிப் போய், “நீங்களே செய்யுங்கள்“ என்று விட்டுவிட்டோம். ஆனால், அதையே சாதகமாகப் பயன்படுத்தி எங்களை இகழ்ந்து தரம் தாழ்ந்த செயல்களில் ஈடுபடுவதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

நாங்கள் தேசியத்தின் அடிப்படையைக் காவிக்கொண்டிருப்பவர்கள். இத்தகைய சின்னத்தனமான அரசியலை எக்காலத்திலும் செய்ய மாட்டோம்.” என்றார்.

# "ஊழல்" ரணில் காலத்தில் யாழ்ப்பாணத்தில் அனுமதி மறுக்கப்பட்ட 4 மதுபானசாலைகளுக்கு "அநுரா" அரசு அனுமதி வழங்கி சீரழிவிற்கான "கதவு" திறக்கட்டுள்ளது

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலும் 4 புதிய மதுபானசாலைகளின் அனுமதிக்கான கட்டணம் பிரதேச செயலகங்களில் சில நாட்களுக்கு முன்னர் செலுத்தப்பட்டுள்ள தவல்கள் வெளியாகியுள்ளன.

2024 ஆம் ஆண்டு “ஊழல்” ஜனாதிபதி ரணிலின் ஆட்சியில் பல தமிழ் பேசும் அரசியல்வாதிகளின் சிபார்சின் பெயரில் நூற்றிற்கும் மேற்பட்ட மதுபானசாலை புதிய அனுமதிகள் அள்ளி வழங்கப்பட்டன. அவ்வாறு வழங்கப்பட்ட அனுமதிகள் ஏற்கனவே மதுபான விற்பனை அனுபவம் கொண்டவர்களிற்கு கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதிகளில் கை மாறின கை மாறிய அனுமதிப் பத்திரங்களைப் பெற்றவர்கள் புதிய மதுபானசாலைகளை ஆரம்பிக்க முற்பட்டபோது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 இடங்களில் மக்களின் அதிக எதிர்ப்பு காரணமாக அதற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்க பிரதேச செயலகங்கள் மறுத்து விட்டன. மறுக்கப்பட்ட மதுபானசாலை உரிமையாளர்கள் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் மதுபானசாலை உரிமையாளர்கள் சார்பில் தீர்ப்பு கிட்டியதனால் தீர்ப்பின் அடிப்படையில் அந்த அனுமதிகளை வழங்குமாறு கோரி அதற்கான பணத்தை செலுத்த தினம் பிரதேச செயலகங்களை நாடினர்.

இதில் சங்கானை, உடுவில், தெல்லிப்பளை மற்றும் கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஒரு பிரிவு தவிர்ந்த ஏனைய 3 செயலகங்களில் ஒரே நாளில் தினம் பணம் செலுத்தப்பட்டுள்ளது. 4 வது செயலகத்தில் செலுத்தப்படலாம் எனத் தெரிய வருகின்றது.




மதுபானசாலைகளிற்கு எதிராக குரல்கொடுப்போம் இது ஊழல் மோசடியாக வழங்கப்பட்ட மதுபானசாலைகள் என அநுரா அரசு பதவியேற்ற காலம் முதல் என்.பி.பி அரசு கூறிவந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் தற்போது சுரேஸ் பிரேமசந்திரன் போன்ற பதவிகள் எதுவும் இல்லாத தமிழ் பேசும் அரசியல் வாதிகளும் இந்த மதுபானசாலை அனுமதி என்னும் புதிய “வியாபாரத்தின்” பங்காளிகள் என்றும் முன்னைய ஆட்சி காலத்தில் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் அந்த அரசியல் வாதிகள் அரச அனுமதியைப் பெற்று அதனை பண முதலைகளுக்கு விற்பனை செய்தார்கள் என்ற விடயம் அனைவருக்கும் தெரிந்த விடயமாக இருந்தாலும் தற்போது மீண்டும் ஏதாவது ஒரு அரசியல் பதவியில் அமர்ந்து விட வேண்டும் என்ற “அவா” வுடன் அவர்கள் அழையா விருந்தாளிகளாக ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டு வருவதாகவும் அறியப்படுகின்றது. அத்துடன் சுமந்திரன் மற்றும் சிவிகே. சிவஞானம் ஆகியோருடன் கைகோர்த்து நின்று ஏதாவது பதவிகளைப் பெற்றுவிட வேண்டும் என்ற நப்பாசையோடு காத்திருப்பதாகவும் அறியப்படுகின்றது.



# கிளிநொச்சி கிராம அலுவலரை தாக்கிய இளங்குமரன் எம்.பிக்கு எதிரான வழக்கு ஒக்டோபர் 26 இற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது!

கடந்த வருடம் நவம்பர் மாத இறுதியில் டித்வா புயல் வீசிய சமயம் கிளிநொச்சியில் புயல் நிவாரணப் பணிகளின் ஈடுபட்டிருந்த கிராம சேவையாளரைத் தாக்கினார் என யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. இளங்குமரனுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ள வழக்கில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு கிளிநொச்சி நீதிவான கிருஷாந்தன் மேலும் ஒரு மாத கால அவகாசம் வழங்கினார்.

கடமையிலிருந்த கிராம சேவையாளரைத் தாக்கியமை தொடர்பான விவகாரம் கடந்த ஜனவரி மாதத்தில் இரண்டு, மூன்று தடவைகள் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. எனினும், பின்னர் அவர் நீதிமன்றில் சரணடைந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு எதிரான வழக்கு கடந்த ஜனவரி 20 ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வழக்கு விசாரணைகளை முடித்து, குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதாயின் அதற்காக சுமார் 8 மாத காலம் கால அவகாசம் வழங்கி வழக்கை வெறொரு தினத்திற்கு நீதிமன்றம் ஒத்திவைத்திருந்தது.

வழக்கு சில நாட்களுக்கு முன்னர் நீதி மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது மன்றில் முன்னிலையான பொலிஸார் வழக்குத் தொடர்பான நிலைப்பாடு எதையும் தெரிவிக்காமல் இருந்த சூழ்நிலையில், விவகாரத்தை ஒட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை மன்றுக்கு வருமாறு அழைத்து, வழக்கை நண்பகல் 1:30 வரை நீதிவான் ஒத்திவைத்தார்.

மீண்டும் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, இந்த விடயத்தில் மேலதிக விசாரணைகளை முடித்து அறிக்கையை தாக்கல் செய்வதற்கு மேலும் ஒரு மாதம் கால அவகாசம் வழங்குமாறு பொலிஸ் தரப்பில் கோரப்பட்டது.

விசாரணையை முடித்து இந்த விடயத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதாயின், அதனை அடுத்த தவணைக்குள் செய்யுமாறு வெளிப்படுத்திய நீதிவான் வழக்கை ஒக்டோபர் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

பாதிக்கப்பட்ட கிராம சேவையாளர் சார்பில் அன்றைய வழக்கின் காலை மற்றும் மதிய அமர்வுகளின் போது ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையாகி சமர்ப்பணங்களைச் செய்திருந்தார்.

அன்று யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனும் மன்றில் முன்னிலையானார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு நிகழ்வு!

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



**கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வு மிகப் பிரமாண்டமானது. யாழ்ப்பாணத்தின் நவீன வரலாற்றில் அப்படி ஒரு தூதரக நிகழ்வு இதுவரை இடம் பெற்றதில்லை. நூற்றுக்கணக்கானவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். பல்வேறு வகைப்பட்டவர்கள் அழைக்கப் பட்டிருந்தார்கள். பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் சங்கங்களைச் சேர்ந்தவர்கள், சுவிற்சர்லாந்தின் நிதி உதவித் திட்டத்திற்கு கீழ் கட்டப்பட்ட வீடுகளின் பயனாளிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழகப் பிள்ளைகள்... என்று பெருந்தொகையானவர்கள் அந்த மண்டபத்தில் நிறைந்து காணப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் இதுவரை இடம்பெற்ற தூதரக நிகழ்வுகளில் மிகப்பெரியது அது எனலாம்.**



கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் மண்டபத்தில் சுவிற்சர்லாந்து நாட்டின் தூதரகத்தால் ஒரு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. சுவிற்சர்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகளின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அந்த விழா ஒழுங்கு செய்யப்பட்டது. வழமையாக தலைநகரில், கொழும்பில் இடம்பெறும் இதுபோன்ற நிகழ்வுகள் இம்முறை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டன.

இப்படி ஒரு நிகழ்வு யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்படுவது இதுதான் முதல் தடவை அல்ல. ஏற்கனவே கடந்த ஆண்டு இலங்கைக்கான ஐநா அலுவலகமும் அவ்வாறான ஒரு நிகழ்வை ஒழுங்குபடுத்தியது. ஐநாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ராஜதந்திர உறவுகளைக் கொண்டாடும் விதத்தில் அந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் திண்ணை ஹோட்டலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களை சேர்ந்தவர்கள்.. என்று பல்வேறு வகைப்பட்டவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

எனினும் இந்த நிகழ்வுடன் ஒப்பிடுகையில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வு மிகப் பிரமாண்டமானது. யாழ்ப்பாணத்தின் நவீன வரலாற்றில் அப்படி ஒரு தூதரக நிகழ்வு இதுவரை இடம் பெற்றதில்லை. நூற்றுக்கணக்கானவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். பல்வேறு வகைப்பட்டவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் சங்கங்களைச் சேர்ந்தவர்கள், சுவிற்சர்லாந்தின் நிதி உதவித் திட்டத்திற்கு கீழ் கட்டப்பட்ட வீடுகளின் பயனாளிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழகப் பிள்ளைகள்... என்று பெருந்தொகையானவர்கள் அந்த மண்டபத்தில் நிறைந்து காணப்பட்டார்கள். யாழ்ப்பாணத்தில் இதுவரை இடம்பெற்ற தூதரக நிகழ்வுகளில் மிகப்பெரியது அது எனலாம்.

பிற்பகல் 2 மணியிலிருந்து 7 மணி வரை என்று நேரமிடப்பட்டிருந்த அந்த நிகழ்வில், அனேகமானவர்கள் இரண்டு மணிக்கே வந்து விட்டிருந்தார்கள். வடமாகாண ஆளுநரின் வருகைக்காக நிகழ்வு அரை மணித்தியாளத்துக்கும் குறையாமல் காத்திருந்தது.

நிகழ்வில், சுவிற்சர்லாந்தின் புதிய தூதுவர் உரையாற்றினார். உரை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. பின்னர் ஓர் ஆவணப்படம் வெளியிடப்பட்டது. அது குறும்படம் என்று கூறப்பட்டாலும் நெடும்படம்தான். அந்தப் படத்தில் கடந்த 70 ஆண்டுகளில் சுவிற்சர்லாந்து தூதரகம் இலங்கைத் தீவில் முன்னெடுத்த பல்வேறு நடவடிக்கைகளும் தொகுக்கப்பட்டு இருந்தன.

அதன்பின் மூன்று பேர் கலந்துகொண்ட ஓர் உரையாடல் இரண்டு மொழிகளிலும் இடம்பெற்றது. தமிழ்ப் பகுதிகளில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு சுவிற்சர்லாந்து நாட்டின் நிதி உதவியோடு வீடுகளைக் கட்டிக் கொடுத்த (Swiss Agency for Development and Cooperation - SDC) “அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான சுவிற்சர்லாந்தின் முகவர் அமைப்பு” என்ற நிறுவனத்துக்குப் பொறுப்பாக இருந்த சுவிஸ் அதிகாரியும், வடமாகாண ஆளுநரும், சுவிற்சர்லாந்தின் மீளக் குடியமர்த்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பூநகரிப் பிரதேசத்தில் மீளக்கட்டி எழுப்பப்பட்ட பரமன்கிராய் கிராமத்தின் முன்பள்ளி ஆசிரியர் ஒருவருமாக மூன்று பேர்கள் அந்த உரையாடலில் கலந்து கொண்டார்கள்.

அதன் பின் ஓர் ஒளிப்படக் காட்சி திறந்து வைக்கப்பட்டது. அந்த ஒளிப்படக் காட்சியில் சுவிற்சர்லாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் பங்களிப்புச் செய்த 70 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த 70 பேர்களின் முகங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. அதில் அவர்களுடைய பங்களிப்புகளும் குறிப்பிடப்பட்டிருந்தன. சுவிற்சர்லாந்து நாட்டவர்களும் உட்பட இலங்கைத் தீவில் உள்ள மூன்று இனத்தவர்களும் அங்கே பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டு இருந்தார்கள். சம்பந்தரின் முகமும் அங்கே இருந்தது.

இந்த நிகழ்வில் அதிகம் கவர்ச்சியாக இருந்த விடயம் என்னவென்றால், அங்கே வந்திருந்த வீட்டுத் திட்டப் பயனாளிகளும் அரசு சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தியவர்களும் சுவிற்சர்லாந்து நாட்டின் தூதுவரோடு நின்று படம் எடுத்துக் கொண்டமைதான். மிக ஆர்வமாக அவரோடு நின்று படம் எடுத்துக் கொண்டார்கள். ஒரு வெளிநாட்டுத் தூதுவரும் உள்ளூர் மக்களும் சந்தோசமாகப் படம் எடுத்துக் கொண்டு ஒரு நிகழ்வு.

அதிலும் குறிப்பாக சுவிற்சர்லாந்தின் வீடமைப்புத் திட்டங்களுக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரியோடு நின்று படம் எடுப்பதற்கு அந்த வீடமைப்பு திட்டத்தால் பயனடைந்தவர்கள் அதிகம் ஆர்வமாகக் காணப்பட்டார்கள். செல்பி யுகத்தில் ஒரு தூதரகத்துக்கும் பொது மக்களுக்கும் இடையிலான இடையூடாட்ட நிகழ்வில் அப்படித்தான் ஒளிப்படங்கள் எடுக்கப்படுமோ தெரியவில்லை.

சுவிற்சர்லாந்து இதுவரையிலும் வடக்கு-கிழக்கில் மீளக்கூடியமாறும் மக்களுக்கு 8000 ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுத்துள்ளது. அந்த வீடுகள் பொதுவாக அரசாங்கத்தால் கட்டிக் கொடுக்கப்படுகின்ற கொலனி வீடுகளைப் போல நெருப்பு பெட்டி வீடுகள் அல்ல. ஒப்பீட்டளவில் பெரிய வீடுகள். வளமான வீடுகள். 8000 ஆயிரம் வீடுகள் எனப்படுவது சாதாரண விடயம் அல்ல. இலங்கைத் தீவில் அவ்வாறு வடக்கு-கிழக்கில் மீளக்கூடியமரும் மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்த வெளிநாடுகளில் அதிக தொகை வீடுகளைக் கட்டிக்கொடுத்தது இந்தியாதான். இந்தியா இதுவரை கட்டிக் கொடுத்த அல்லது புனரமைத்த வீடுகளின் மொத்தத் தொகை 46000.

சுவிற்சர்லாந்து வீடுகளை மட்டும் கட்டிக்கொடுக்கவில்லை. நாட்டில் இனங்களுக்கு இடையிலான்சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது. இந்த அடிப்படையில் பாதிக்கப்பட்ட மக்களை அது நெருங்கி வந்திருக்கிறது என்பது அந்த நிகழ்வில் தெரிந்தது. 70 ஒளிப்படங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் அமைப்புகளைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களும் இருந்தார்கள். குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். அந்த அமைப்புகளோடு சுவிற்சர்லாந்து நெருங்கிச் செயற்படுகிறது. மேலும் அண்மை ஆண்டுகளில் சுவிற்சர்லாந்து அரசாங்கத்துக்கும் தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும் இடையிலான உரையாடலுக்கான வாய்ப்புகளையும் உருவாக்கிக் கொடுத்திருக்கிறது.

சுவிற்சர்லாந்தின் வீடமைப்புத் திட்டங்கள் பாராட்டப்படுகின்றன. அது எந்தளவுக்குப் பயனாளிகளைச் சென்றடைந்திருக்கிறது என்பது அவர்கள் அந்த வீடமைப்புத் திட்டத்திற்குப் பொறுப்பாக இருந்த சுவிட்சர்லாந்து நாட்டவரோடு படம் எடுத்துக் கொள்வதில் காட்டிய ஆர்வம் நிரூபித்தது. அதேசமயம் நல்லிணக்க முயற்சிகளில் குறிப்பாக இனங்களுக்கு இடையிலான நல்லிணக்க முயற்சிகளிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்கும் விவகாரங்களிலும் சுவிற்சர்லாந்து தூதரகத்தின் செயற்பாடுகள் ஒரு பகுதி பாதிக்கப்பட்ட மக்களாலும் கட்சிகளாலும் விமர்சிக்கப்படுகின்றன.

குறிப்பாக, சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட “இமாலயப் பிரகடனம்” கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியது. இந்தப் பிரகடனத்தை உருவாக்கிய புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் அமைப்புகளுக்கும் பௌத்த மகா சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே அனுசரணையாளராகவும் ஏற்பாட்டாளராகவும் செயல்பட்டது தூதரகத்தின் ஓய்வுபெற்ற ஓர் அதிகாரி ஆவார். எனவே இமாலயப் பிரகடனத்தின் பின்னால் சுவிட்சர்லாந்து இருப்பதாக அப்பொழுது விமர்சனங்கள் வந்தன.

அதன்பின் அண்மை ஆண்டுகளில் தமிழ்க் கட்சிகளும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் தனது நாட்டில் சந்திப்பதற்குரிய ஏற்பாடுகளை சுவிட்சர்லாந்து தூதரகம் செய்து கொடுத்தது. இந்தச் சந்திப்புகளும் எதிர்பார்த்த விளைவுகளைத் தரவில்லை மட்டுமல்ல, ஒருபகுதி தமிழ்க் கட்சிகள் சுவிற்சர்லாந்தின் மீதும் விமர்சனங்களை முன்வைக்கும் ஒரு நிலைமை தோன்றியது.

இலங்கைத் தீவில் கடந்த சுமார் 75 ஆண்டுகளுக்கும் மேலான இன முரண்பாட்டுக் களத்தில் நடுநிலையாளராக அல்லது மத்தியஸ்த்தராக அல்லது வசதிப்படுத்துனராக அல்லது ஏதோ ஒரு வகையில் பங்களித்த, முயற்சித்த வெளிநாடுகள் அல்லது வெளிநாட்டு நிறுவனங்கள் பெரும்பாலானவை தமிழ் மக்களால் விமர்சிக்கப்படுவதைக் காண்கிறோம். இந்தியாவில் இருந்து தொடங்கி சுவிற்சர்லாந்து வரை இதற்கு விதிவிலக்கில்லை. முன்னாள் இந்தியத் தூதுவர் டிக்ஸிற்றில் தொடங்கி நோர்வேயின் சொல் ஹெய்ம் வரையிலும் யாருமே இதில் தப்பவில்லை. திம்புவில் தொடங்கி ஜெனிவா வரையிலும் இடம்பெற்ற எல்லாச் சந்திப்புகள் மற்றும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் தமிழ்த் தரப்பிடம் விமர்சனங்கள் உண்டு.

இங்கே ஒரு கேள்வியைத் தொகுத்துக் கேட்கலாம். கடந்த 75 ஆண்டுகளிலும் இனமுரண்பாட்டில் சம்பந்தப்பட்ட மூன்றாவது தரப்புகள் அல்லது வெளித் தரப்புகள் ஒரு கட்டத்தில் ஏன் தமிழ் மக்களால் சந்தேகிக்கப்படுகின்றன? மூன்றாவது தரப்பு ஒன்றின் பிரசன்னம் இல்லாமல் இந்த நாட்டில் சம்பந்தப்பட்ட இரண்டு தரப்புகளையும் ஒரு மேசைக்குக் கொண்டுவர முடியாது என்பதே கடந்த 75 ஆண்டுகால சமாதான முயற்சிகளில் பெற்ற பாடமாகும். ஆனால் இந்த எல்லாச் சமாதான முயற்சிகளின் போதும் மூன்றாவது தரப்பு கடுமையான விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதற்குப் பிரதான காரணம் என்ன? வெளித் தரப்புகள் ஈழத் தமிழர்களை உண்மையாகவே ஏமாற்றி விட்டனவா? அல்லது வெளித் தரப்புகளை நோக்கிய ஈழத் தமிழர்களின் எதிர்பார்ப்புகள் அளவுக்கு மிஞ்சியவைகளாக அல்லது யதார்த்தமற்றவைகளாகக் காணப்படுகின்றனவா? அல்லது வெளித் தரப்புகளை தமிழ்த் தரப்பினால் கெட்டித்தனமாக, தீர்க்கதரிசனமாகக் கையாள முடியவில்லையா? எது பொருத்தமான காரணம்?

சண்டையோ சமாதானமோ எல்லாவற்றுக்கும் ஓர் அரசியல் இலக்கு இருக்கும். ராஜதந்திர இலக்குகள் இருக்கும்.சமாதானம் என்பதற்காக அதை நீதி நெறிகள் அறநெறிகளுக்கூடாக விளங்கிக் கொள்ளத் தேவையில்லை. இந்த பூமியிலே தூய சமாதான என்று எதுவுமே இல்லை.

நாடுகள் நாடுகளோடு வைத்துக்கொள்ளும் உறவுகளில் மட்டுமல்ல நாடுகளுக்கும் அரசற்ற தரப்புகளுக்கும் அரசற்ற தரப்புகளின் போராட்ட அமைப்புகளுக்கும் இடையிலான உறவுகளிலும்கூட ராணுவப் பொருளாதார அரசியல் இலக்குகள் இருக்கும். இந்தக் கொடூரமான பூமியிலே அரசுக்கும் அரசுகளுக்கும் இடையிலான அல்லது அரசுக்கும் அரசற்ற தரப்புகளுக்கும் இடையிலான அல்லது அரசுகளுக்கும் தனி நபர்களுக்கும் இடையிலான உறவுகளில் தூய அன்பு, தூய அறம் என்பவை எல்லாம் இருப்பது குறைவு. மாறாக நிலையான அரசியல், ராஜதந்திர, ராணுவப் பொருளாதார நலன்கள் தான் இருப்பதுண்டு.

இந்த அடிப்படையில்தான் சமாதானத் தூதுவர்களையும் சமாதானம் செய்ய வரும் நாடுகளையும் நிறுவனங்களையும் அல்லது அனுசரணை புரியவரும் அமைப்புக்களையும் நாடுகளையும் நிறுவனங்களையும் ஈழத் தமிழர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.சமாதானமும் ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரல்தான். அங்கேயும் அரசியல் பொருளாதார ராணுவ ராஜதந்திர இலக்குகள் இருக்கும். இந்த பூமியிலே தூய சமாதானம் என்று எதுவுமே கிடையாது.தாங்கள் நீதிக்காகப் போராடுவதால் உலகம் தங்களிடம் நீதியாக நடந்துகொள்ள வேண்டும் என்று ஈழத் தமிழர்கள் எதிர்பார்க்கக் கூடாது. இந்த இடத்தில் நான் அடிக்கடி மேற்கோள் காட்டும் ஆபிரிக்கப் பழமொழியைக் கூறி இக்கட்டுரையை முடிக்கலாம் “நீ நீதியாக இருப்பதினால் உலகம் உன்னிடம் நீதியாக நடந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கக்கூடாது. வாறு எதிர்பார்ப்பது, நீ சிங்கத்தைச் சாப்பிட மாட்டாய் என்பதற்காக சிங்கம் உன்னைச் சாப்பிடாது என்று எதிர்பார்ப்பதைப் போன்றுதான்”.



# கேரதீவு சங்குப்பிட்டி பாலப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மன்னாரைச் சேர்ந்த பொலிஸ் காவலர் ஒருவர் பலி

இலங்கை செய்திகள் Sri Lanka News

(29-09-2026)

யாழ்ப்பாணம், மன்னார் வீதியில் கேரதீவு சங்குப்பிட்டி பாலப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மன்னாரைச் சேர்ந்த பொலிஸ் காவலர் ஒருவர் 29-09-2026 அன்று பலியானார்.

பூநகரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய மன்னாரைச் சேர்ந்த 31 வயதான ஆர்னோல்ட் அன்ரனி என்பவரே உயிரிழந்துள்ளார.

அவர் செலுத்திதச் சென்ற மோட்டார் சைக்கிள் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியோர மதகுடன் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அன்னாரது சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உடற்கூற்று பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# புதிய மதுபானசாலையை எதிர்த்து 8ம் திகதி வியாழக்கிழமை வலி வடக்கில் பாரிய போராட்டம்!

யாழ்ப்பாண மாவட்டத்தில் 04 புதிய மதுபானசாலைகளுக்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் வலி வடக்கு பிரதேச சபை எல்லைக்குள்ளும் ஒரு மதுபானசாலைக்கான அனுமதி வழங்கப்படவுள்ளதாக அறிய முடிகிறது.

இந் நிலையில் இதுவரை காலமும் மதுபானசாலைகளற்ற பிரதேசமாக காணப்படும் வலி வடக்கில் மதுபானசாலை அனுமதி வழங்கப்படுவதை கண்டித்து பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் எதிர்ப்பு கண்டன பேரணி ஒன்று வியாழக்கிழமை அன்று நடைபெறவுள்ளது.

வியாழன் காலை 9.00 மணிக்கு தெல்லிப்பழைச் சந்தியில் ஆரம்பமாகும். எதிர்ப்பு பேரணி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் மகஜர் கையளித்தலுடன் நிறைவடையும். எனவே அனைத்து சமூக ஆர்வலர்களும் இப் போராட்டத்தில் பங்கெடுக்கவும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# ஞானசார பிக்கு சிறைக்கு அனுப்பப்பட்டதால் கோட்டாபாய கொலை செய்த ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியாவுக்கு எதிராக தீவிர வெறுப்புப் பிரச்சாரம்

பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு நீதிமன்றத்தால் மீண்டும் ஒருமுறை சிறைத் தண்டனை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மஹிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியும் இலங்கையின் முன்னணி மனித உரிமைச் செயற்பாட்டாளருமான சந்தியா அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளார். இவர் இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் மற்றும் அதற்கு முன்னர் இடம்பெற்ற கிளர்ச்சிகளின் போது காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோரின் குடும்பங்களின் பிரதிநிதித்துவ அடையாளமாக மாறிய பெண்ணான சந்தியா எக்னெலிகொடவிற்கு 2017ஆம் ஆண்டு அமெரிக்காவின் சர்வதேச துணிச்சல்மிக்க பெண் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அவருக்கு எதிராக சமூக ஊடகங்களில் வெறுப்பைத் தூண்டும் வகையிலான கருத்துகளைப் பதிவிட்டவர்களில், ஜனாதிபதி விருது பெற்ற ஊடகவியலாளர் ஒருவரும், சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களும் அடங்குகின்றனர்.

மஹிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பான வழக்கு, 2016 ஜனவரி மாதம் ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த போது, ஞானசார தேரர் நீதிமன்றத்திற்குள் நுழைந்து நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும், பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவுக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, 2018ஆம் ஆண்டு நீதிமன்ற அவமதிப்பு உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுகளில் ஞானசார தேரர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு, அவருக்கு 6 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கலகொடஅத்தே ஞானசார தேரர் சுமார் 9 மாதங்கள் அந்தச் சிறைத்தண்டனையை அனுபவித்து வந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கினார். இதனை சவாலுக்கு உட்படுத்தி, சந்தியா எக்னெலிகொட உள்ளிட்ட சிலர் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்தனர்.



2026 செப்டம்பர் 10ஆம் திகதி, குறித்த ஜனாதிபதி மன்னிப்பு சட்டபூர்வமானதல்ல என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததனைத் தொடர்ந்து, 2026 ஒக்டோபர் 5ஆம் திகதி, ஞானசார தேரருக்கு நீதிமன்றத்தால் முன்னதாக விதிக்கப்பட்டிருந்த சிறைத்தண்டனையின் எஞ்சிய காலத்தை ஒக்டோபர் 5 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.



இந்த நீதிமன்ற உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டதை தொடர்ந்து, ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியான சந்தியா எக்னெலிகொட தொடர்பாக சமூக ஊடகங்களில் பல்வேறு வெறுப்புணர்வைத் தூண்டும் பதிவுகள் பகிரப்பட்டு வருகின்றன.

"சந்தியா தனது இறுதி மூச்சை விடும் விதம் இலங்கைக்கே கண்களைத் திறக்கச் செய்யும்... இன்றைக்கு இவ்வளவுதான்..." என இலங்கையைச் சேர்ந்த சமூக ஊடகச் செயற்பாட்டாளர் சாமர விஜேசூரிய தனது பேஜ்புக்கில் பதிவிட்டிருந்த பதிவுக்கு, இலங்கையின் அரச விருது பெற்ற ஊடகவியலாளர் ராகுல் சமந்த ஹெட்டிஆரச்சி, "நாட்டுக்கு ஒரு சாபமாக இருந்தவள்" எனக் கருத்து தெரிவித்துள்ளார்.

20 ஆண்டுகளுக்கும் மேலாக ஊடகத் துறையில் பணியாற்றி வரும் ராகுல் சமந்த ஹெட்டிஆரச்சி, புலனாய்வு ஊடகவியலாளராகப் பிரபலமானவர். அவர் BBC-இன் முன்னாள் சுயாதீன ஊடகவியலாளராகவும் பணியாற்றியுள்ளார். மேலும், இலங்கையில் ஊடகப் பயிற்றுநராகவும் செயல்பட்டு வருகிறார். அத்துடன், சர்வதேச அளவிலும் அவர் ஊடகவியலாளராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

"பிரகீத் எக்னெலிகொடவுக்காக குரல் கொடுப்பவர்கள், அவர் எமது இராணுவத்திற்கு எதிராக கூறிய பொய்களைப் பார்க்காமல் இருந்தால், இதோ பாருங்கள்" எனக் குறிப்பிட்டு, Sri AV TV Network தனது ஓ கணக்கில் காணொளியொன்றைப் பகிர்ந்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் மற்றும் அதற்கு முன்னர் இடம்பெற்ற கிளர்ச்சிகளின் போது காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்கணக்கானோரின் குடும்பங்களின் பிரதிநிதித்துவ அடையாளமாக மாறிய பெண்ணான சந்தியா எக்னெலிகொடவிற்கு 2017ஆம் ஆண்டு அமெரிக்காவின் சர்வதேச துணிச்சல்மிக்க பெண் என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட தனது கணவர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பான உண்மையை வெளிக்கொண்டு வருவதற்கு அதிகாரிகள் ஏற்படுத்திய தடைகளைப் பொருட்படுத்தாமல், 80 தடவைகளுக்கும் மேலாக நீதிமன்றத்துக்குச் சென்று சந்தியா வெளிப்படுத்திய துணிச்சல், அவரை அந்த விருதிற்கு தேர்ந்தெடுப்பதற்கான காரணமாக அமைந்ததாக அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் தோமஸ் ஏ. ஷெனன் தெரிவித்திருந்தார்.

# வட்டுகோட்டையில் வாளுடன் சென்று ஊரவர்களை மிரட்டும் இளைஞர்களை கைது செய்யாமல் பாராமுகம் காட்டும் பொலிஸார்!

## இந்த "வாள் வீச்சுக்காரர்கள்" சோழ மன்னர்களுடைய வாரிசுகளா? என்றும் மக்கள் கேள்வி




வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முதலிகோவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இருவர் வாளுடன் சென்று அந்த ஊரவர்களை மிரட்டுகின்ற காணொளி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஊரவர்களுடன் ஏற்பட்ட முரண்பாட்டினை தொடர்ந்து இவ்வாறு வாளினை எடுத்து சென்று மிரட்டியுள்ளனர். இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தும் பொலிஸார் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

வாளுடன் வந்த ஒரு இளைஞன் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குடும்பப் பெண் ஒருவரது விரலையும் வாளினால் வெட்டி துண்டாக்கியுள்ளார். மேலும் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் பல வழக்குகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.


புரட்டாசி
சனி
விரத சாப்பாடு
புரட்டாசி மாதம் அனைத்து
சனிக்கிழமைகளிலும் கிடைக்கும்.
HSB
CANADA
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
Scarborough
1571 Sandurst Circle,
Unit 12B, Mississough,
ON. MV 1V2.
Tel: 416 290 7755
Mississauga
4559 Hurontario Street,
Unit 12B, Mississauga,
ON. L4Z 3R1.
Tel: 905 290 0769
Brampton
295A Queentario Street,
Unit 5B, Mississauga,
ON. L6W 3R1.
Tel: 905 457 0769
Delta
8701 - 120th Street,
Delta, BC
ON. VAC 6R4.
Tel: 778 598 7755

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பு சந்திவெளியில் கட்டிட சுவர் இடிந்து விழுந்து இரண்டு பிள்ளைகளின் தந்தை பலியானார்!

**கனகராசா சரவணன்**



மட்டக்களப்பு, சந்திவெளி பிரதேசத்தில் வீடு ஒன்றினன் கட்டுமானப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கட்டிட சுவர் ஒன்று இடிந்து விழுந்ததில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ள சம்பவம் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியடி வீதியைந் சேர்ந்த 48 வயதுடைய சாமித்தம்பி குமாரசிங்கம் எனும் மேசன் தொழிலாளியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சந்திவெளி பிரதான வீதியை அண்மித்த பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடு ஒன்றுக்கு சம்பவ தினமான அன்று காலை இரு மேசன் தொழிலாளர்கள் கொங்கிறீட் கொட்டுவதற்காக பக்கப்பலகை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது எதிர்பாராத விதமாக சுவர் இடிந்து வீழ்ந்ததையடுத்து ஒருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்ததுடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதனையடுத்து படுகாயமடைந்த இரு வரையும் அருகிலுள்ள சந்திவெளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கிண்ணையடியைச் சேர்ந்த சாமித்தம்பி குமாரசிங்கம் ஏற்கனவே உயிரிழந்ததாக வைத்தியர்கள் தெரிவித்ததுடன் படுகாயமடைந்த மற்றுமொருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இட மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.



# புதிய மதுபானசாலை அனுமதிக்கு எதிராக வலிகாமம் வடக்கு மக்கள் ஆர்ப்பாட்டம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

**ந.லோகதயாளன்**

மதுபானசாலைகளற்ற பிரதேசமாகக் கருதப்படும் வலிகாமம் வடக்குப் பகுதியில் புதிய மதுபானசாலைக்கு அனுமதி வழங்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் கண்டனப் பேரணி ஒன்று இன்று முன்னெடுக்கப்பட்டது.

எதிர்காலத்தைச் சிதைக்கும் இந்தச் செயற்பாட்டுக்கு அனுமதி வழங்கிய பிரதேச செயலரை உடனடியாக இடமாற்றுமாறு வலியுறுத்தி தெல்லிப்பழைச் சந்தியில் 8ம் திகதி காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்தப் போராட்டம், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தது.

மதுபானசாலை அனுமதியை மறுபரிசீலனை செய்யக் கோரும் தமது நியாயமான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் இதன்போது பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டது.

சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டு மதுபானசாலை அனுமதிக்கு எதிரான தமது கண்டனங்களைப் பதிவு செய்தனர்.

வலிகாமம் வடக்கின் சமூகச் சூழலையும் மக்களின் நலனையும் கருத்திற்கொண்டு மதுபானசாலை அனுமதி வழங்கும் தீர்மானத்தை உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று போராட்டத்தில் பங்கேற்றவர்கள் வலியுறுத்தினர்.

# தனது நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாக மதுபான – சாலைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்குவதை எதிர்க்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை

வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக மதுபானசாலைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்காமை தொடர்பாக அதன் தலைவர் கையொப்பமிட்ட வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளருக்கு எழுதிய கடிதம் இங்கு காணப்படுகின்றது.

மேற்படி விடயம் தொடர்பான எமது NP/14/41(17)/1/Gen/2025 இலக்க 2025.03.24 திகதிய கடிதத்திற்கு மேலதிகமானது. (பிரதி இணைக்கப்பட்டுள்ளது. இணைப்பு 01).

மேற்படி விடயம் தொடர்பாக, வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக மதுபானசாலைகளினை அமைப்பதில் எமக்கு உடன்பாடில்லையென தெரிவித்து தங்களிற்கு கடிதம் வரைவதென 2026.02.23 ஆம் திகதிய பத்தாவது சபை அமர்விலே தீர்மானம் (வ.மே.பி.ச.தீர்மான இல.21) நிறைவேற்றப்பட்டுள்ளது. (பிரதி இணைக்கப்பட்டுள்ளது. இணைப்பு 02).

மேலும் குறித்த விடயம் தொடர்பில் 2026.09.23 ஆம் திகதிய பதினேழாவது சபை அமர்வில் புதிதாக எந்தவொரு மதுபானசாலைகளிற்கும் அனுமதி வழங்குவதற்கான அனுமதிப்பத்திரங்களினை வழங்க வேண்டாமென தங்களிற்கு கடிதம் வரைவதென தீர்மானம் (வ.மே.பி.ச.தீர்மான இல.21) நிறைவேற்றப்பட்டுள்ளது. (பிரதி இணைக்கப்பட்டுள்ளது. இணைப்பு 03).

எமது பிரதேசத்தில் பெரும்பாலான மக்கள் வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களாக காணப்படுகின்றன. புதிதாக மதுபானசாலைகளை ஆரம்பிப்பதன் மூலம் மதுபான நுகர்வு அதிகரிப்பதனை ஊக்கப்படுத்துவதாக அமையும் என்பதுடன் சமூக விரோத செயற்பாடுகள் அதிகரிக்கக்கூடிய சூழல் உருவாகும். எனவே பொதுமக்கள் பிரதிநிதிகளை கொண்டமைந்த எமது சபையின் தீர்மானங்களினை கருத்திற்கொண்டு பொதுமக்களின் நலன் கருதி எமது பிரதேச சபை பகுதிகளில் புதிதாக எந்தவொரு மதுபானசாலைகளிற்கும் அனுமதி வழங்குவதற்கான அனுமதிப்பத்திரங்களினை வழங்க வேண்டாமென தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 25ஆவது வருடமாக நடத்தும்**
**திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு**
**நடைபெறும் திருமுறை விழா**
**சிறார்களுக்கான போட்டிகள்**



**போட்டிகள் நடைபெறும் இடம்:**
**ஆத்மஜோதி இல்லம்**
**1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

திருமுறை மனனப் போட்டி
நவம்பர் 28, 2026 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

பேச்சுப் போட்டி
நவம்பர் 28, 2026 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

**திருமுறைவிழா 2025**
இடம்: ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்
635 Middlefield Rd, Scarborough, ON M1V 5B8

காலம்: டிசம்பர் 05 சனிக்கிழமை (05-12-2026) மாலை 3:00 மணி - இரவு 9:00 மணி வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பாலர்பிரிவு: | 30-11-2020 ஆம் திகதியும் அதன் பின் பிறந்தவர்களும் | | | |
| கீழ்ப்பிரிவு: | 30-11-2020 | - | 30-11-2016 | க்கும் இடைப்பட்டவர்கள் |
| மத்தியபிரிவு: | 30-11-2016 | - | 30-11-2012 | க்கும் இடைப்பட்டவர்கள் |
| மேற்பிரிவு: | 30-11-2012 | - | 30-11-2008 | க்கும் இடைப்பட்டவர்கள் |

**பேச்சுப் போட்டி விடயங்களை**
**விண்ணப்படிவத்துடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.**

திருமுறைப் மனனப் போட்டிக்கு தேவையான பாடல்கள் யாவற்றையும் இந்து சமயப் பேரவை வெளியீடான பயன்தரவல்ல திருமுறைப்பாக்கள் என்ற நூலில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி நவெம்பர் 25, 2026**
**விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்**

**தொடர்புகளுக்கு**
Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

**விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும்**
**பேச்சுப் போட்டிக்குரிய விடயமும் கிடைக்கும் இடம்**
**முருகன் புத்தகசாலை,**
GTA MALL 5215 Finch Ave. E. **416-321-0285**
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**சிவ முத்துலிங்கம் 416-724-6240**
**ஜனா தயாபரன்:416-560-1812**

**ஒன்ராறியோ**
**இந்து சமயப் பேரவை, கனடா**

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் நவராத்திரியை முன்னிட்டு சிறப்பு பூசை

குருவடி சரணம்

திருவடி சரணம்





மார்க்கம் ஸ்காபரோவில் அமைந்திருக்கும் மேல்மருவத்துர் ஆதிபராசக்தி குருமன்றத்தில் நவராத்திரி சிறப்பு பூசை

09-10-2026 வெள்ளிக்கிழமை காலை அமாவாசை சிறப்பு பூசையுடன் மகேஸ்வர பூசை நடைபெறும்.

10-10-2026 சனிக்கிழமை மாலை 5:00 தொடக்கம் 9:00 மணிவரை துர்க்கை வழிபாடு நடன நிகழ்ச்சியுடன் சிறப்பு பூசை ஆரம்பம்.

11-10-2026 ஞாயிற்றுக்கிழமை மாலை அகண்டம் ஏற்றப்பட்டு தொடர்ந்து பூசைகள், நடன நிகழ்சி நடைபெறும்.

தொடர்ந்து 10 நாட்களும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

18-10-2026 ஞாயிறு காலை பங்காரு அடிகளாரின் 3ம் ஆண்டு நிறைவுநாளை முன்னிட்டு குருபூசை சிறப்பாக நடைபெறும்.

மாலை தொடர்ந்து சரஸ்வதிபூசை நிகழ்ச்சிகளுடன் நடைபெறும்.

20-10-2026 செவ்வாய்கிழமை காலை விஜயதசமி சிறப்புபூசை நடைபெறும்.

அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெறுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். உங்களுக்கு விரும்பிய உதவிகள் செய்யலாம். பூ, தேசிக்காய் மற்றும் பூசைப்பொருட்கள் கொடுத்து உதவலாம். பகல் மகேஸ்வர பூசையுடன் முடிவடையும.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647


## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.

அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**



Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24








RE-ELECT
NICK MANTAS
FOR CITY COUNCILLOR
Ward 22 | Scarborough-Agincourt

## GETTING THINGS DONE FOR OUR COMMUNITY

Des résultats concrets pour notre communauté

为我们的社区做实事

Με έργο και αποτελεσματικότητα για την κοινότητα μας

Կը նպաստեմ ու կ'աջակցիմ համայնքի կարիքներուն

عملٌ ونتائجُ من أجل مجتمعن

நமது சமூகத்திற்காக செயல்பட்டு பலன்களை வழங்குகிறோம்

ہماری کمیونٹی کے لیے کام اور نتائج

Naghahatid ng mga resulta para sa ating komunidad.

Learn more at www.nickmantas.com

hello@nickmantas.com | 416-321-8898


VJ PRODUCTIONS
IN ASSOCIATION WITH
VIJAYA JEWELLERY
PRESENTS
PRODUCTIONS
Vijaya Jewellery
TITLE SPONSOR
VIBRANT HOSPITALITY GROUP
Makka
LIVE IN TORONTO
POWERED BY
GTA COACH
YOUR TRUSTED TRAVEL PARTNER SINCE 1989
EVENT SPONSOR
YORK
PRIMA
Nanthu's KITCHEN
HI FI BARBERSHOP
THE CHOP SHOP
GOLD SPONSOR
LOEI THAI
SILVER SPONSOR
GS CAPITAL GROUP
EXCLUSIVE RADIO PARTNER
east FM 102.7
SASITHA SUYATHARAN
Mortgage Broker
Academy of Learning
McCowan / 401 North
LAND KING
JEGAN
DATE
SATURDAY, October 24TH
2026
TIME
5:30 PM
CANADA EVENT CENTRE
300 WATER ST, WHITBY, ON L1N 9B6
DOORS OPEN 5:30 PM | SHOW STARTS AT 6:00 PM
COLLABORATING WITH
TORONTO SINGERS & MUSICIANS

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் 132ஆவது அகவை நிறைவுநாளும் பரிசளிப்பு விழாவும் சிறப்பாக நடைபெற்றது!





யாழ்/வட்டு இந்துக் கல்லூரியின் 132ஆவது அகவை நிறைவுநாளும் பரிசளிப்பு விழாவும் 6ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் முத்து திருநந்த வெளி அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் நீண்டகால கல்விப் பாரம்பரியத்தையும், மாணவர்களின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான சாதனைகளையும் கௌரவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழா, கல்லூரிச் சமூகத்தின் முக்கிய நிகழ்வாக இடம்பெற்றது.

விழாவிற்கு கல்லூரி முதல்வர் சி.தனஞ்சயன் தலைமை தாங்கியிருந்ததுடன், பிரதம விருந்தினராக வடக்கு மாகாணத்தின் ஆளுநர் நா.வேதநாயகன் கலந்துகொண்டார். இதன்போது மாணவர்களின் கல்விசார் முன்னேற்றம், திறமைகள் மற்றும் எதிர்கால இலக்குகளை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

விழாவின் ஆசியுரையை குரு முதல்வர், விநாயகான குருகுலத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ சர. வசுதேவக்குருக்கள் வழங்கினார். அவரது ஆசியுரையில் கல்வியுடன் ஒழுக்கம், பண்பாடு, ஆன்மிக விழுமியங்கள் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றை மாணவர்கள் தமது வாழ்வில் பேண வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

மேலும், சிறப்பு விருந்தினராக சீ.சிவசிவா, பிரதிக் கல்விப்பணிப்பாளர் - நிறுவன மற்றும் பொதுமுகாமைத்துவம், வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம், கலந்துகொண்டார். கல்லூரியின் கல்விசார் செயற்பாடுகள் மற்றும் மாணவர்களின் பல்வேறு திறமைகளை ஊக்குவிப்பதில் ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானது என இந்நிகழ்வின் ஊடாக எடுத்துரைக்கப்பட்டது.

விழாவின் முக்கிய அம்சமாக பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. கல்வியில் சிறந்து விளங்கிய மாணவர்கள், பல்வேறு துறைகளில் திறமைகளை வெளிப்படுத்தியவர்கள் மற்றும் கல்லூரியின் பெருமையை உயர்த்திய மாணவர்களுக்கு அவர்களது சாதனைகளைப் பாராட்டும் வகையில் பரிசுகள் மற்றும் கௌரவங்கள் வழங்கப்பட்டன. மாணவர்களின் முயற்சிகளுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவதன் மூலம், எதிர்காலத்தில் மேலும் சிறப்பாகச் செயல்பட அவர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்நிகழ்வு அமைந்தது.

இதேவேளை, விழாவில் பரிசளிப்பு மற்றும் கல்விசார் சாதனைகள் மட்டுமன்றி கல்லூரியின் 132 ஆண்டுகால பாரம்பரியமும் பெருமையும் நினைவுகூரப்பட்டன. பல தலைமுறைகளாக மாணவர்களுக்கு கல்வி, ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வை வழங்கி வரும் யாழ்/வட்டு இந்துக் கல்லூரியின் பணியை தொடர்ந்தும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

நிகழ்வில் கௌரவ விருந்தினராக பு.பார்த்திபன், யாழ்ப்பாணம் பிராந்திய உள்நாட்டுப் போக்குவரத்து உதவி ஆணையாளர் மற்றும் பழைய மாணவர், கலந்துகொண்டார். அத்துடன், நினைவுப் பேருரையை திரு. பி. தவநாதன், முன்னாள் ஆசிரியர் - யாழ்/வட்டு இந்துக் கல்லூரி, வழங்கினார். கல்லூரியுடனான தனது அனுபவங்களையும், கல்வி நிறுவனமாக அதன் வளர்ச்சிப் பயணத்தையும் நினைவுகூரும் வகையில் அவரது உரை அமைந்தது.

இவ்விழா, கல்லூரியின் தற்போதைய மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பல தரப்பினரையும் ஒருங்கிணைக்கும் நிகழ்வாக அமைந்தது.

132 ஆண்டுகால கல்விப் பாரம்பரியத்தைத் தாங்கி நிற்கும் யாழ்/வட்டு இந்துக் கல்லூரியின் 2026ஆம் ஆண்டுக்கான அகவை நிறைவுநாள் மற்றும் பரிசளிப்பு விழா, மாணவர்களின் திறமைகளைப் பாராட்டுவதுடன், கல்லூரியின் எதிர்காலக் கல்விப் பயணத்திற்கும் புதிய உத்வேகத்தை ஏற்படுத்திய முக்கிய நிகழ்வாக நிறைவடைந்தது.



# அம்பாறை மாவட்டம் – பொத்துவில் பிரதேச கோமாரி கிராமத்தில் "சர்வதேச சிறுவர் தின விழா" வெகு விமர்சையாகக் கொண்டாடப்பெற்றது!



அம்பாறை மாவட்டம் - பொத்துவில் - கோமாரி கிராமத்தில் "உதவும் பொற்கரங்கள் அமைப்பு - கனடா" அமைப்பின் ஏற்பாட்டில், "சிரிப்பால் சிறகு விரி, சிந்தனையால் உலகை வெற்றிகொள்" எனும் தொனிப்பொருளில் "சர்வதேச சிறுவர் தின விழா" மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

இவ்விழாவானது கனடாவைச் சேர்ந்த சமூக சேவையாளர் "உதவும் பொற்கரங்கள் அமைப்பு" நிறுவனர். விசு கணபதிப்பிள்ளை அவர்களின் முயற்சியிலும், கனடா உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியரும் "நட்பின் நாயகன், சமூக ஜோதி" நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்களின் நிதி அனுசரணையிலும் சிறப்பாக இடம்பெற சாத்தியமானது.

இக்கொண்டாட்ட நிகழ்வில் அப்பகுதியின் மாலைநேர வகுப்புச் சிறுவர்கள், பெற்றோர்கள் மற்றும் பகுதி நேர ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, அவர்களுக்குச் சிறப்புப் பரிசுகளும் சிற்றூண்டிகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.



நிகழ்வின் இறுதியில், இத்தகைய நற்செயல்களைத் தொடர்ந்து முன்னெடுத்து வரும் சமூக சேவையாளர் கனடா - விசு கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், நிதி அனுசரணை வழங்கிய நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும் மற்றும் நிகழ்வைச் சிறப்பாக ஒருங்கிணைத்த உதவும் பொற்கரங்கள் அமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளர் திரு. சௌவியதாசன் உள்ளிட்ட அனைவருக்கும் மாலைநேர வகுப்பு ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சார்பில் மனமார்ந்த நன்றி தெரிவிக்கப்பட்டது. இங்கே காணப்படும் படங்கள் அன்றை சிறுவர் தின விழா வைபவத்தில் எடுக்கப்பெற்றவையாகும்.

# அவுஸ்திரேலியா மெல்பேர்னில் 6 சிறுமிகளை பாலியல் வன்புணர்ந்த இலங்கைத் தேரருக்கு 13 ஆண்டுகள் சிறை!



அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் சிறுமிகளை பாலியல் வன்புணர்ந்த குற்றம் இலங்கையில் பிறந்த பௌத்த தேரர் ஒருவருக்கு 13 ஆண்டுகள் மற்றும் இரண்டு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் உள்ள விகாரை ஒன்றில் ஆறு சிறுமிகளை பாலியல் வன்புணர்ந்த குற்றம் நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மெல்பேர்னில் உள்ள தம்ம சரண விகாரையின் (Dhamma Sarana) விகாராதிபதியான 71 வயது நாவட்டுன்னே விஜித (Naotunne Vijitha) தேரருக்கு, விக்டோரியா கவுண்டி நீதிமன்றம் தண்டனை விதித்ததாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விஜித தேரர் இலங்கை பௌத்த சமூகத்தில் தனக்கு வழங்கப்பட்டிருந்த மதிப்புமிக்க நிலையைப் பயன்படுத்தி சிறுமிகளை வன்புணர்ந்திருப்பது, நம்பிக்கைக்கு இழைக்கப்பட்ட தீவிரமான துரோகம் என நீதிபதி பிரதீப் டிவானா (Pardeep Tiwana) குறிப்பிட்டுள்ளார்.

2025ஆம் ஆண்டு விஜித தேரர் 17 குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாகக் கண்டறியப்பட்டார். அவற்றில், சிறுமியொருவருடன் பாலியல் ஊடுருவலில் ஈடுபட்ட ஒன்பது குற்றச்சாட்டுகளும், சிறுமியொருவரிடம் அநாகரிகமான செயலில் ஈடுபட்ட எட்டு குற்றச்சாட்டுகளும் அடங்குகின்றன.

1994 முதல் 2002 வரையிலான காலப்பகுதியில் மெல்பேர்னின் ஸ்பிரிங்வே வல் மற்றும் கீஸ்பரோ (Springvale and Keysborough) பகுதிகளில் இயங்கிய விகாரையில் இந்தக் குற்றங்கள் இடம்பெற்றுள்ளன.



விஜித தேரர் இளம் சிறுமிகளைத் தனது தங்குமிடத்துக்கு மீண்டும் மீண்டும் அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டதாகவும், சில சந்தர்ப்பங்களில் அவர்களது பெற்றோர் அருகிலுள்ள அறைகளில் இருந்தபோதும் இந்த குற்றம் இடம்பெற்றதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமிகள் தங்களது குடும்பத்தினருடன் மத நடவடிக்கைகளில் பங்கேற்பதற்காக விகாரைக்கு வந்திருந்தனர்.

தண்டனை விதிக்கும் போது, விகாரையில் தமது பிள்ளைகள் பாதுகாப்பாக இருப்பார்கள் என நம்பிய பெற்றோர்கள் வைத்திருந்த நம்பிக்கையை விஜித தேரர் பயன்படுத்திக் கொண்டதாக நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் பெண்கள் முன்வந்து பொலிஸாரிடம் வன்புணர்வு குறித்து முறையிட்டதாகவும், இதனைத் தொடர்ந்து 2023ஆம் ஆண்டு விஜித தேரர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டதாகவும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின்போது அவர் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. குற்றச்சாட்டப்பட்ட சம்பவங்கள் இடம்பெறவில்லை என அவரது சட்டத்தரணிகள் வாதிட்டதுடன், சில முறைப்பாட்டாளர்களை அவர் நினைவில் கொள்ள முடியவில்லை என்றும் தெரிவித்தனர்.

தண்டனை விதிக்கப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் ஆதரவாளர்களை நோக்கி விஜித தேரர் புன்னகைத்தும் கையசைத்தும் இருந்ததைப் பார்த்து பல பாதிக்கப்பட்டவர்கள் கோபமடைந்ததாகவும் அவுஸ்திரேலிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

விஜித தேரர் இலங்கையில் பிறந்ததுடன், தனது 15ஆவது வயதில் பௌத்த துறவற வாழ்க்கையில் இணைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அவர் ஸ்வீடனுக்குச் சென்று அந்நாட்டின் குடியுரிமையைப் பெற்றார். அதன் பின்னர் 1994ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்குச் சென்று தம்ம சரண விகாரையின் தலைமைப் பிக்குவாகப் பொறுப்பேற்றார்.


BEHIND ME MEDIA
PRESENTS
TITLE SPONSOR
CHEF's DEPOT
Majestic City
大豐商場
A CELEBRATION OF ASIAN FOOD, MULTICULTURE & COMMUNITY
亚洲美食盛宴
多元文化与社区
ஆசிய உணவு, பண்பாடு மற்றும் சமூக ஒற்றுமையின் கொண்டாட்டம்
MAJESTIC ASIAN
FOOD FESTIVAL
OCTOBER 10, 11 & 12
11 AM ONWARDS
@
MAJESTIC CITY | CAR PARK AREA
2900 MARKHAM RD, SCARBOROUGH, ON M1X 0C8
60+ VENDORS
LIVE PERFORMANCES
CULTURAL SHOWS
FREE SHUTTLE SERVICES
MAGIC MOMENTS FOR KIDS
Muhurtham Jewels
CATEGORY PARTNER
Np MORTGAGES
CATEGORY PARTNER
SAIEZ SAREES
CATEGORY PARTNER
SMART RESTORATION
CATEGORY PARTNER
SV MEDIA
SERVICE PARTNER
east FM 102.7
RADIO PARTNER
FOR MORE INFORMATION :
AKILESH +1 647 706 1189 | JATINDER +1 437 688 6029 | JEE VELNATHAN +1 416 300 6418
majesticasianfoodfestival.com

# சர்வாதிகாரத்தை கையிலெடுக்கும் அநுர அரசின் 'புதிய பிசாசு'

## அதுதான் "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்"




***"இலங்கையில் 48 ஆண்டுகள் நீடித்த பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது வெறும் சட்டப் பிரிவு அல்ல. அது பல ஆயிரக்கணக்கான மனிதர்களின் இரத்தமும் கண்ணீரும், வேதனையும் ஈடு செய்யமுடியாத வலிகளும் இழப்புகளும் நிறைந்த ஒரு கறுப்பு வரலாறு. இக்கொடூரச் சட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று எதிர்பார்த்த மக்களுக்கே அநுர அரசு கொண்டுவரும் "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்" என்ற புதிய பிசாசு மீண்டும் ஒரு பேராபத்தின் தொடக்கமாக அமையப்போகின்றது. இந்தச் சட்டம் மக்களைக் காப்பாற்றுவதற்கு அல்ல. அநுரவின் அரசாங்கத்தைக் காப்பாற்றவே எனபதை தமிழ் சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்!"***

**---------------------------------------------------------------------- கே.பாலா -**

கடந்த 48 ஆண்டுகளாக இலங்கையின் பல தலைமுறைகளை அச்சத்திலும், அநீதியிலும் மூழ்கடித்து வைத்திருந்த "அரச பிசாசு" எனும் "பயங்கரவாதத் தடைச் சட்டம்" (PTA) ஒழிக்கப்படும் என்ற நம்பிக்கையில் இருந்த மக்களுக்கு "புதிய கொடூர பிசாசு" என்பது போல, கடந்த செப்டம்பர் 22 ஆம் திகதி அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டு கடந்த ஒக்டோபர் 6 ஆம் திகதி நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்" (PSAT-Protection of the State from Acts of Terrorism Bill) அமைந்துள்ளது. அநுர அரசு பழைய அடக்குமுறைச் சட்டத்தை விடவும் அதிக கொடூரமும் ஆபத்தும் கொண்ட இந்த சட்டத்தை கொண்டு வருவது மாற்றத்திற்கு வாக்களித்துத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு, வழங்கத் துணியும் ஜனநாயகத்தின் மீதான மற்றுமொரு கொடூர தாக்குதலாக, அடக்குமுறையின் வடிவமாக, அதே கொடுங்கோன்மையைத் தொடரத் துடிக்கும் சர்வாதிகாரத்தனமாகவேயுள்ளது.

ஒரு ஜனநாயக நாட்டில் சட்டங்கள் என்பது குடிமக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காக உருவாக்கப்படுபவை. ஆனால், இலங்கையில் கடந்த அரை நூற்றாண்டுகாலமாக (48 ஆண்டுகள்) பயங்கரவாதத் தடை என்ற சட்டத்தின் பெயரில் மக்களின் குறிப்பாக தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் நசுக்கப்பட்டு இந்த சட்டத்தின் ஊடாக கைதுகள், பலவருட சிறைத்தண்டனைகள், கொடூர சித்திரவதைகள் தான் இடம்பெற்றுவந்தன. இந்த நிலையில், தற்போதைய அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் கொண்டுவரத்துடிக்கும் புதிய "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்", முந்தைய சட்டத்தை விடவும் மிகவும் நுட்பமான, அதே சமயம் ஆபத்தான அடக்குமுறை அதிகாரங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் 48 ஆண்டுகள் நீடித்த பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது வெறும் சட்டப் பிரிவு அல்ல. அது பல ஆயிரக்கணக்கான மனிதர்களின் கண்ணீரும், வேதனையும் ஈடு செய்யமுடியாத வலிகளும் இழப்புகளும் நிறைந்த ஒரு கறுப்பு வரலாறு. இக்கொடூரச் சட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று எதிர்பார்த்த மக்களுக்கே, இந்த "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்" என்ற புதிய பிசாசு மீண்டும் ஒரு பேராபத்தின் தொடக்கமாக அமையப்போகின்றது. பழைய சட்டத்தின் கொடூரங்களை மறைத்து, அதைவிடப் பல மடங்கு பற்களையும் கூர்மையான நகங்களையும் கொண்ட ஒரு புதிய அடக்குமுறைக் கரத்தை அரசாங்கம் நீட்டியுள்ளது. அரசைப் பாதுகாப்பது என்ற போர்வையில், குடிமக்களின் ஜனநாயகக் குரல்வளையை நெரிக்கும் இந்த புதிய சட்டமூலம் முந்தைய சட்டத்தை விட ஏன் அதிக பயங்கரமானது?

### பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஆரம்பமும் பின்னணியும்

இதற்கு முதலில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஆரம்பத்தையும் பின்னணியையும் பார்க்கவேண்டும். 1979 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்தால் 1979 இன் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்) என்ற பெயரில் கொண்டுவரப்பட்டது. தொடக்கத்தில் 3 ஆண்டுகள் மட்டுமே செல்லுபடியாகும் "தற்காலிகச் சட்டமாக" பாராளுமன்றத்தில் அவசர அவசரமாக விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 1982 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்கத் திருத்தத்தின் மூலம் இச்சட்டம் காலவரையறையற்ற நிரந்தரச் சட்டமாக மாற்றப்பட்டது.தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தையும், அரசாங்கத்திற்கு எதிரான அரசியல் எதிர்ப்புகளையும் ஒடுக்குவதையே இது பிரதான நோக்கமாகக் கொண்டது.

இச்சட்டம் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சட்டக் கோட்பாடுகளுக்கு முற்றிலும் முரணான பல சரத்துக்களைக் கொண்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் எவரையும் பொலிஸாரோ அல்லது பாதுகாப்புப் படையினரோ கைது செய்ய முடியும். பாதுகாப்பு அமைச்சரின் கையொப்பத்துடன் 18 மாதங்கள் வரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தாமலேயே தடுப்புக் காவலில் வைக்க இச்சட்டம் அதிகாரம் அளிக்கிறது. சாதாரண சட்டத்தில் பொலிஸ ாரிடம் கொடுக்கும் வாக்குமூலம் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படாது. ஆனால், இந்த சட்டத்தின் கீழ் பொலிஸ் அதிகாரியிடம் பெறப்படும் வாக்குமூலம் நீதிமன்றத்தில் பிரதான சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும். இதன் காரணமாக, கைதிகளைக் கொடூரமான முறையில் சித்திரவதை செய்து, பொய் வாக்குமூலங்களில் கட்டாயப்படுத்தி கையொப்பம் பெறும் கலாசாரம் உருவானது. "தான் குற்றமற்றவன்" என்பதை நீதிமன்றத்தில் கைதியே நிரூபிக்க வேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டது.சட்டமா அதிபரின் ஒப்புதல் இன்றி சாதாரண நீதிமன்றங்களால் பிணை வழங்க முடியாது.

இச்சட்டத்தின் முதன்மை இலக்காகவும் பலியாகவும் தமிழினமே அமைந்தது. ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள், மாணவர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் வெறும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டனர். "தேடுதல் நடவடிக்கை" என்ற பெயரில் தமிழ் கிராமங்கள் சுற்றி வளைக்கப்பட்டு, ஒரே இரவில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கொண்டு செல்லப்பட்டனர். குற்றச்சாட்டோ, விசாரணையோ இல்லாமல் 10 முதல் 20 ஆண்டுகள் வரை சிறைகளில் வாடிய தமிழ் அரசியல் கைதிகள் ஏராளம்.தற்போதும் பலவருடங்களாக பல தமிழர்கள் இந்த சட்டத்தின் கீழ் சிறைகளில் வாடுகின்றனர். பலர் சிறைகளிலேயே மரணித்தும் உள்ளனர்.

1983 வெலிக்கடைச் சிறைப் படுகொலை மற்றும் 2000 ஆம் ஆண்டு பிந்துனுவெவ மறுவாழ்வு முகாம் படுகொலை ஆகியவற்றில் இந்த சட்டத்தின் கீழ் கைதாகி சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ் இளைஞர்களே கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் மீண்டும் திரும்பி வரவில்லை. அவர்கள் "காணாமல் ஆக்கப்பட்டோராக" மாறினர். தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கும் தீவிர சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப்பட்டதாக மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்தே உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. தமிழ்த் தேசியக் கட்சிகள் இச்சட்டத்தை "தமிழர்களை ஒடுக்கும் கறுப்புச் சட்டம்" எனப் பாராளுமன்றத்திலும் வீதிகளிலும் தொடர்ந்து எதிர்த்தன. வடக்கு-கிழக்கில் "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம்" நடத்தும் தொடர் போராட்டங்களில் இந்த சட்டத்தை நீக்கக் கோரும் குரல் முதன்மையாக உள்ளது. 2021 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட "பொத்துவிலிலிருந்து பொலிகண்டி வரை" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க பேரணியில் இந்த சட்டத்தை உடனடியாக இரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுவாக முன்வைக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்பட்ட இச்சட்டம், பிற்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் 2022 "அரகலய" போராட்டக்காரர்கள் என சிங்களவர்கள் மீதும் உயிர்த்த ஞாயிறு தற்கொலைக்குண்டுத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம்கள் மீதும் பயன்படுத்தப்பட்டபோது தென்னிலங்கையிலும் எதிர்ப்பு வலுத்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இந்த சட்டத்தை முற்றாக இரத்து செய்ய வேண்டும் எனப் பல தீர்மானங்களில் (30/1 உட்பட) இலங்கை அரசை வலியுறுத்தியது. ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கி வரும் ஜி.எஸ்.பி + வரிச்சலுகையை நீடிப்பதற்கு இந்த சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்பதை முக்கிய நிபந்தனையாக விதித்தது.மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற சர்வதேச அமைப்புகள் இச்சட்டத்தை "அடக்குமுறையின் ஆயுதம்" எனக் கண்டித்தன.

இவ்வாறான நிலையில் தான் நாமும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழித்தே தீருவோம் என கடந்த 2024 ஜனாதிபதித் தேர்தலில் வாக்குறுதியளித்து சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் அமோக ஆதரவுடன் ஆட்சிபீடம் ஏறிய அநுர குமார தலைமையிலான அரசு இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக கூறிக்கொண்டு அதனை விடவும் பயங்கரமான "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்" என ஒன்றை கொண்டுவருகின்றது.

### புதியது ஏன் இன்னும் கொடூரமானது?

1979-ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு (PTA) மாற்றாக முன்வைக்கப்பட்டுள்ள "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்" (PSAT-Protection of the State from Acts of Terrorism Bill / Anti-Terrorism Bill), பழைய சட்டத்தை விடவும் பல வழிகளில் ஏன் மிகவும் ஆபத்தானது அச்சுறுத்தலானது?

பழைய பயங்கரவாதத் தடைச் சட்டம் குறிப்பிட்ட வன்முறைச் செயல்கள் மற்றும் அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கைகளை மட்டுமே கட்டுப்படுத்துவதை முதன்மையாகக் கொண்டிருந்தது. புதிய சட்டமூலமான பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலத்தில் "பயங்கரவாதம்" என்பதற்கான வரையறை மிகவும் பரந்த அளவிலும் தெளிவின்றியும் உள்ளது. அரசின் இயல்புநிலையை ஸ்தம்பிக்கச் செய்தல், சேவைகளைத் தடை செய்தல், அரசுக்கு அல்லது அரசு நிறுவனங்களுக்கு அழுத்தம் கொடுத்தல் போன்றவை "பயங்கரவாதச் செயல்களாக"ச் சித்திரிக்கப்பட அதில்வாய்ப்புக்கள் உள்ளன. இதன் மூலம் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டங்கள், மாணவர் போராட்டங்கள், சிவில் சமூகப் போராட்டங்கள் மற்றும் ஜனநாயக ரீதியிலான ஆர்ப்பாட்டங்கள் கூட "பயங்கரவாதம்" என முத்திரை குத்தப்படும் அபாயம் உள்ளது.

அத்துடன் புதிய சட்டமூலத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அல்லது பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த மூத்த அதிகாரிகளே சந்தேகநபர்களை நீண்ட காலம் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிட அதிகாரம் பெறுகின்றனர். நீதித்துறை தலையீடு இன்றி, தன்னிச்சையாக நபர் ஒருவரைக் கைது செய்து தடுத்து வைக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்படுகிறது. "பயங்கரவாதத்தைத் தூண்டுதல்" அல்லது "ஊக்கப்படுத்துதல்" என்ற பெயரில் மிக விரிவான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அரசாின் தவறுகளை விமர்சிக்கும் ஊடகவியலாளர்கள், அரசியல் ஆய்வாளர்கள், அல்லது சமூக ஊடகப் பதிவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும், அவர்களை அச்சுறுத்துவதற்கும் இச்சட்டம் வழிவகுக்கின்றது.

(தொடர்ச்சி 19 பக்கம்)

கனடிய செய்திகள்
Canadian News

## 15th Annual Dance Event, hosted by Toronto's Potsathangai Danace Academy was a beautiful and graceful evening.

# குரு ஸ்ரீமதி பொன்மதி பத்மவரதனின் பொற்சதங்கை கலைக்கூடம் வழங்கிய அழகிய 15வது ஆண்டு விழா!



### ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்திற்கு 10000 டாலர்களை வழங்கி ஒரு முக்கிய பங்காளிகளாக மாறிய குருவின் குடும்பத்தினர், மாணவச் செல்வங்கள் மற்றும் அவர் தம் பெற்றோர்!

நிறுவனரும் குருவுமாகிய ஸ்ரீமதி பொன்மதி பத்மவரதன் அவர்களில் நிர்வாகத்தில் இயங்கும் ரொறன்ரோ பொற்சதங்கை கலைக்கூடம் கடந்த 3ம் தி-கதி சனிக்கிழமை யோர்க்வுட் நூலக கலாச்சார மண்டபத்தில் வழங்கிய அழகிய 15வது ஆண்டு விழா ஆர்ப்பாட்டங்கள் எதுவுமின்றி ஒரு நிகரற்ற நடன விழாவா-கவும் பெற்றோர்கள் மற்றும் நடன ஆசிரியைகள் நடன விரும்பிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சங்கமித்த ஒரு தமிழர் நிகழ்வாகவும் இடம்பெற்றது என்றால் அது மிகையாகாது.!

அத்துடன் அன்றைய தினம் சமூக அக்கறையோடு ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்திற்கு 10000 டாலர்களை ஒன்றிணைந்து வழங்கி ஒரு முக்கிய பங்காளிகளாக மாறிய குருவின் குடும்பத்தினர், மாணவச் செல்வங்கள் மற்றும் அவர் தம் பெற்றோர் ஆகியோர் தங்கள் தனித்துவத்தை நிருபித்த நிகழ்வாகவும் அன்றைய மாலை அமைந்தது!

அன்றைய ஆண்டு விழாவிற்கு நடன ஆசிரியை ஸ்ரீமதி சித்திரா தர்மலிங்கம் அழைக்கப்பெற்றிருந்தார். அத்துடன் "அறிவகம்" தமிழ்க் கல்லூரி மற்றும் பிரதான அனுசரணையாளர்களான பிரம்ரன் லீலா சுப்பர் மார்க்கட் நிறுவன உரிமையாளர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் என மண்டபம் நிறைந்த ஒரு விழாவாக 15வது ஆண்டு விழா திகழ்ந்தது.

கவிஞர் கஜேந்திரன் சண்முகநாதன் அழகாகத் தொகுத்து வழங்கினார். ஆங்கில அறிவிப்புக்களை செல்வன் சதுர்சிகம் சுமந்திரன் நிகழ்த்தினார்.

இவ்வாண்டுக்குரிய ஆண்டு விழாவில் குரு பொன்மதி பத்மவரதன் அவர்களும் பெற்றோர் மற்றும் மாணவ மணிகளும் அதிக கவனம் எடுத்து நடன உடை அலங்காரத்திலும் அதிகம் கவனம் எடுத்து விழாவை நடத்திய நடனங்களின் தரமும் மேடையின் அழகும் இணைந்து சபையோருக்கு கண்கொள்ளாக் காட்சிகளாக விளங்கிய ஒவ்வொரு நடன உருப்படியும் அவர்கள் மண்டபத்தை விட்டு விலகிச் சென்றாலும் அவர்கள் மனங்களில் நீண்ட நாட்களுக்கு காட்சிகளாக நிலைத்து நிற்கும் பெருமையை பெற்றன என்பது சபையோரின் கருத்தாக விளங்கியது.

மொத்தத்தில் குரு ஸ்ரீமதி பொன்மதி பத்மவரதனின் பொற்சதங்கை கலைக்கூடம் வழங்கிய அழகிய 15வது ஆண்டு விழா சபையில் அமர்ந்திருந்த அனை-வரையும் குறிப்பாக பிரதம விருந்தினர் உட்பட ஏனை நடன ஆசிரியைகளுக்கும் பெரும் விருந்தாக அமைந்திருக்க வேண்டும் என்பதும் பிரதம விருந்தினரின்







உரையிலிருந்து சபை-யோர் அறிந்து கொண்ட ஒரு விடயம் எனலாம்.

ஒரே கூரைய-ின் கீழ் தங்கள் நடனப் பள்ளியின் அபார உழைப்பையும் குருவின் திறமையும் மாணவ மணிகளின் குரு பக்தியையும் பெற்றோரின் மானசீ-கமான ஆதரவையும் வர்த்தக நிறுவனங்களின் ஆதரவை நிருபிக்கும் ஒரு தமிழர் விழாவாகவும் அத்துடன் தமிழ் சமூக மையத்தின் கட்டட நிதி வழங்கிய பெருமையும் மகிழ்ச்சியும் மிக்கவர்களாக அனைவரும் இல்லம் ஏகினர்.





இவ்வருடத்தின் விழாவிற்கு தங்கள் ஆதரவை வழங்கிய வர்த்தக நிறுவனங்களான லீலா சுப்பர் மார்க்கட், சுவர்ண மஹால் காஞ்சிபுரம் சேலைகள், நந்தா உணவகம், நித்தியா தையலகம் அழகுக்கலை நிபுணர் ஹரிணி ஆகியோர்க்கும் நன்றி தெரிவிக்கப்பெற்றது.

*- UTHAYAN LJI Journalist Ganesh -*

கனடிய செய்திகள்
Canadian News

## Canadian Journalists Celebrate 'National Newspaper Week' being from October 4th to 10th.

# கனடியப் பத்திரிகையாளர்கள் அக்டோபர் 4 முதல் 10 வரை "தேசிய பத்திரிகைகள் வாரத்தை" கொண்டாடுகிறார்கள்




**கனடியப் பத்திரிகையாளர்கள் அரசியல் மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்கிறார்கள், கேள்விகளைக் கேட்கிறார்கள், பிரச்சினைகளை விசாரிக்கிறார்கள் மற்றும் தங்கள் சமூகங்களைப் பாதிக்கும் முடிவுகளைப் பற்றி எதிர் அறிக்கை செய்கிறார்கள்.**

---------------------------------------------------

பத்திரிகையாளர்களுக்கு புலு கடமைகளும் பொறுப்புக்களும் அவர்களுக்கு முன்பாக வழங்கப்பட்டுள்ளன. தகவல்களைக் கண்டறியவும், கருத்துக்களைப் பகிரவும், ஒரு உரையாடலில் பலர் இணைந்து கொள்ளவும் முன்பை விட இப்போது அதிக வழிகள் உள்ளன. ஆனால் சமூக ஊடக ஊட்டங்கள் அவைக்குரிய நெறிமுறைகளால் பெருகிய முறையில் வடிவமைக்கப்படுவதால், நமக்கு ஏற்கனவே ஆர்வமுள்ளவற்றை அதிகமாகவும், நாம் சுயமாகத் தேடாதவற்றை குறைவாகவும் பார்ப்பது எளிதாகிவிட்டது.

செய்திக் கதைகளைப் படிப்பது பொழுதுபோக்கின் பாதி மதிப்பு மட்டுமே: மற்ற பாதி அவை தூண்டும் உரையாடல்களில் இருந்து வருகிறது. நமது சமூகங்களை வடிவமைக்கும் மக்கள், பிரச்சினைகள் மற்றும் யோசனைகளுடன் செய்தித்தாள்கள் நம்மை இணைக்கும் நான்கு வழிகள் இங்கே உள்ளன.

### 1. நெறிமுறைகள் சார்ந்த எதிரொலி அறையை உடைத்தல்

நமது ஆர்வங்கள், முந்தைய செயல்பாடுகள் மற்றும் நம்மை ஈடுபாட்டுடன் வைத்திருக்க வாய்ப்புள்ளவற்றின் அடிப்படையில், நமது ஊட்டங்களில் தோன்றுவதை இயல்பான நெறிமுறைகள் பாதிக்கலாம். செய்தித்தாள்கள் வித்தியாசமான ஒன்றை வழங்குகின்றன மற்றும் பல்வேறு கண்ணோட்டங்களை உங்களுக்கு வெளிப்படுத்துகின்றன, இதன் மூலம் நீங்கள் பாரபட்சமற்ற உள்ளூர் மற்றும் உலகளாவிய பார்வைகளைப் பெறுவதை உறுதி செய்கின்றன.

### 2. சமூகங்களை இணைத்தல்

உள்ளூர் செய்திப் பத்திரிகைகள் உள்ளூர் கதைகள் கேட்கப்படுவதை உறுதி செய்கின்றன. கனடியர்கள் உலகளாவிய ஆதாரங்களை மட்டுமே நம்பியிருக்கும்போது, அவர்கள் சமூக உணர்வை இழக்கிறார்கள். செய்தித்தாள்கள் மைல்கற்கள், கலாச்சாரம், உள்ளூர் நிகழ்வுகள் மற்றும் பலவற்றைக் கொண்டாடுகின்றன. பொதுவான ஒருமித்த கருத்தைக் கண்டறிய அல்லது விவாதிக்க, முக்கியமான தலைப்புகளை எழுப்புமாறு செய்தித்தாள்கள் சமூகத்தை ஊக்குவிக்கின்றன.

### 3. முடிவெடுப்பவர்களைப் பொறுப்புக்கூறச் செய்தல்

பத்திரிகையாளர்கள் அரசியல் மன்றக் கூட்டங்களில் கலந்துகொள்கிறார்கள், கேள்விகளைக் கேட்கிறார்கள், பிரச்சினைகளை விசாரிக்கிறார்கள் மற்றும் தங்கள் சமூகங்களைப் பாதிக்கும் முடிவுகளைப் பற்றி எதிர் அறிக்கை செய்கிறார்கள்.

சரிபார்க்கப்பட்ட தகவல்களையும் பின்னணியையும் வழங்குவதன் மூலம், செய்திப் பத்திரிகைகள் பொறுப்புக்கூறலுக்கு அவசியமானவை. மேலும், தலைவர்களையும் அரசியல்வாதிகளையும் அவர்களின் செயல்களுக்கும் வார்த்தைகளுக்கும் பொறுப்புக்கூறச் செய்கின்றன. இது உங்கள் அரசியல் பின்னணி எதுவாக இருந்தாலும், வெளிப்படையான உரையாடலுக்கு வழிவகுக்கிறது.

### 4. உள்ளூர் குரல்களைப் பெருக்குதல்

உலகளாவிய மற்றும் தேசிய ஊடகங்கள் மிகத் தீவிரமான அரசியல் நிலைப்பாடுகளைப் பெரிதுபடுத்த முனைகின்றன. செய்தித்தாள்கள் வணிக உரிமையாளர்கள், குடியிருப்பாளர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் போன்ற உள்ளூர் குரல்களுக்கு ஒலிவாங்கியை வழங்குகின்றன. இது சாதாரண உரையாடல்களைப் பரிச்சயமானதாகவும், தொடர்புடையதாகவும் வைத்திருக்கிறது.

செய்திப் பத்திரிகைகள் வாசகர்களுக்குத் தகவல்களைத் தருகின்றன, அவர்களை ஊக்குவிக்கின்றன, மேலும் அவர்களை இணைக்கின்றன. ஒரு வலுவான எதிர்காலத்தை நோக்கி நாம் செயல்படும்போது, நமது சமூகங்களுடன் அர்த்தமுள்ள உரையாடல்களில் ஈடுபடுவதற்குத் தேவையான தகவல்களை அவை நமக்கு வழங்குகின்றன.

தேசிய செய்திப் பத்திரிகைகள் வாரத்தின் போது கொண்டாடப்பட வேண்டிய ஒரு விஷயம் இது - ஆரோக்கியமான ஜனநாயகத்தைப் பேணுவதில் கனேடியப் பத்திரிகையாளர்களின் பங்களிப்பைப் போற்றும் ஒரு நிகழ்வு. உண்மையான மக்கள், உண்மையான செய்திகளை வழங்குகிறார்கள். இந்த ஆண்டு, தேசிய செய்தித்தாள் வாரம் அக்டோபர் 4 முதல் 10, 2026 வரை நடைபெறுகிறது.

மேலும் அறிய www.nationalnewspaperweek.ca என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

### தேசிய செய்தித்தாள் வாரத்தை நாம் ஏன் கொண்டாடுகிறோம்

தேசிய செய்திப் பத்திரிகைகள் வாரம் என்பது, ஒரு சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான ஜனநாயகத்தில் செய்தித்தாள்கள் ஆற்றும் முக்கியப் பங்கை அங்கீகரிப்பதற்கான ஒரு வருடாந்திர வாய்ப்பாகும். இது வட அமெரிக்காவில் அக்டோபர் முதல் வாரத்தில் கொண்டாடப்படுகிறது. உள்ளூர் செய்திப் பத்திரிகைகள் ஒவ்வொரு நாளும் கனேடியர்களுக்கு முக்கியத் தகவல்களை வழங்குகின்றன: அவை நாடு முழுவதும் உள்ள உள்ளூர் சமூகங்களை இணைத்து, குடிமக்களைத் தகவலறிந்தவர்களாகவும், ஈடுபாடு கொண்டவர்களாகவும், இணைந்தவர்களாகவும் வைத்திருக்கின்றன என்பதை நாம் உறுதியாக நம்பலாம். வாருங்கள் கனடியப் பத்திரிகையாளர்களை கொண்டாடுவோம்!

*- UTHAYAN LJI Journalist Ganesh -*

உலக செய்திகள்
World News

# ராகுல் காந்தி உள்ளிட்ட எம்.பி.க்கள் கைது செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்துள்ள ஜி.கே.வாசன்



ராகுல் காந்தி உள்ளிட்ட எம்.பி.க்கள் கைது செய்யப்பட்டதற்கு தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) தலைவர் ஜி.கே.வாசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: எஸ்ஐஆர் "வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்" சம்பந்தமாக ஜனநாயக முறைப்படி போராட்டத்தில் ஈடுபட்ட மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை காவல்துறையினர் கைது செய்த நடைமுறை கண்டனத்துக்குரியது.

இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நடத்தப்பட்ட "வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்" என்ற நடவடிக்கையில் மக்களுக்கு நம்பிக்கை குறைந்து சந்தேகம் வலுத்துள்ளது. அந்த வகையில் எஸ்ஐஆர் நடைமுறைகள் மாற்றப்பட வேண்டும். இதனை முன்னிறுத்தி தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிராக டில்லியில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனநாயக முறைப்படி போராடினார்கள். அந்த போராட்டத்தில் ஈடுபட்ட ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் கட்சித் தலைவர்களை காவல்துறையினர் கைது செய்த நடைமுறை கண்டனத்துக்குரியது, ஏற்புடையதல்ல. குறிப்பாக காங்கிரஸ் தலைவர்கள் ராகுல் காந்தி மற்றும் பிரியங்கா காந்தி உள்ளிட்ட எம்பிக்கள் மீது டெல்லி காவல்துறை எப்.ஐ.ஆர் பதிவு செய்ததும் முறையற்றது. இது போன்ற அணுகுமுறையை காவல்துறையினரும் டில்லி அரசும் மாற்றிக்கொள்ள வேண்டும். எஸ்ஐஆர் சம்பந்தமாக நியாயமாகப் பேரணியில் கலந்துகொண்ட காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை காவல்துறையினர் கைது செய்ததை தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) சார்பில் கண்டித்து, ஜனநாயகத்தில் நியாயமான போராட்டத்திற்கு இடம் இருக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

# கொல்கத்தா விமான நிலையத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மர்ம நபர்கள்



மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள விமான நிலையத்தில் வெடிகுண்டு வைக்கப் பட்டுள்ளதாகவும், அது எந்த நேரத்திலும் வெடிக்கக்கூடும் எனவும் கூறி மின்னஞ்சல் மூலம் மர்ம நபர்கள் வெடிகுண்டு மிரட்டல் விடுத்துள்ளனர். இது குறித்து உடனடியாக பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. விமான நிலையத்தின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை (சி.ஐ.எஸ்.எப்.) வீரர்கள், உடனடியாக விமான முனையம் மற்றும் பிற பகுதிகளில் தீவிர சோதனையை தொடங்கினர்.

மேலும் விமான நிலைய வளாகத்தில் உள்ள அனைத்து இடங்களும் முழுமையாக சோதிக்கப்பட்டன. இந்த சோதனையில் சந்தேகத்திற்குரிய பொருள் எதுவும் கண்டறியப்படவில்லை. இதனால் வெடிகுண்டு மிரட்டல் போலியானது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த நபர்கள் யார் என்பது குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எலான் மஸ்க் குற்றச்சாட்டு ஆதாரமற்றதென விளக்கம் அளித்துள்ள இந்திய மத்திய அரசு



எலான் மஸ்க் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது என மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது. இந்தியாவில் 11,256 கிராமங்களில் 4ஜி சேவை இல்லாததாக வெளியான தகவலைத் தொடர்ந்து, ஸ்டார்லிங்க் இந்தியாவில் அறிமுகமாவதற்கு சில சக்திவாய்ந்தவர்கள் தடையாக இருப்பதாக எலான் மஸ்க் குற்றம்சாட்டியுள்ளார். தங்களது ஏகபோக ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்ளவே ஸ்டார்லிங்க் சேவை தடுக்கப்படுவதாகக் கூறிய மஸ்க், இதை இந்திய மக்களுக்கு இழைக்கப்படும் குற்றம் என்றும் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தநிலையில், 66 ஸ்டார்லிங்க் இந்தியாவில் செயல்பட சில பருமுதலாளிகள் தடையாக இருப்பதாக எலான் மஸ்க் குற்றம்சாட்டியிருந்த நிலையில், இது தொடர்பாக மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது. அதில், எலான் மஸ்க் குற்றச்சாட்டு அடிப்படை ஆதாரமற்றது. இந்தியாவில் செயற்கைக்கோள் இணைய சேவைகளுக்கு பாரபட்சமற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 3 நிறுவனங்களுக்கு செயற்கைக்கோள் இணைய சேவைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனைத்து செயற்கைக்கோள் தகவல் தொடர்பு சேவைகளுக்கும் நியாயமான, பாகுபாடற்ற விதிமுறைகளே பின்பற்றப்படுகின்றன. ஸ்டார்லிங்க் உள்ளிட்ட 3 நிறுவனங்களுக்கும் உரிமம் வழங்கப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்பு மதிப்பீடு முடிந்ததும் அலைக்கற்றை ஒதுக்கீட்டுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் ஸ்டார்லிங்க் சேவையை வரவிடாமல் சில நிறுவனங்கள் தடுக்கின்றன என்ற எலான் மஸ்க் குற்றச்சாட்டிற்கு மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

# தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜை நடிகர் ரஜினி நேரில் அழைத்து பாராட்டியுள்ளார்



ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் உள்பட மூன்று பதக்கங்களை வென்ற வித்யா ராம்ராஜை நடிகர் ரஜினிகாந்த் நேரில் அழைத்துப் பாராட்டியுள்ளார். ஜப்பானில் நடந்து முடிந்த 20-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் மகளிருக்கான 400 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியின் இறு திச் சுற்றின் இறுதிப் பகுதியில் அபாரமாக ஓடி தங்கம் வென்று, இந்தியாவின் கனவை நனவாக்கினார்.

அதேபோல் கலப்பு 400 மீட்டர் தொடர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தவர், 400 மீட்டர் தடை ஓட்டத்தில் 54.75 விநாடிகளில் இலக்கைக் கடந்து வெண்கலம் வென்றதுடன், ஜாம்பவான் பி.டி. உஷாவின் 42 ஆண்டுகால தேசிய சாதனையை முறியடித்திருந்தார். இவர் கடந்த அக்டோபர் 3-ம் தேதி சொந்த ஊரான கோவைக்கு திரும்பினார். ஆசிய விளையாட்டு போட்டியில் சாதனை படைத்து திரும்பி இருக்கும் தடகள வீராங்கனை வித்யாவை அரசியல் தலைவர்கள் பாராட்டி வருகின்றனர். இந்த நிலையில், சென்னை போயஸ் கார்டன் இல்லத்துக்கு வித்யா ராம்ராஜை நேரில் வரவழைத்த நடிகர் ரஜினிகாந்த் அவரை பாராட்டி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# 2026ம் ஆண்டு இலக்கியத்துக்கான நோபல் பரிசு கனடாவைச் சேர்ந்த ஆனி கர்சனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது



2026-ம் ஆண்டு இலக்கிய துறைக்கான நோபல் பரிசு கனடாவின் ஆனி கர்சனுக்கு அளிக்கப்பட்டுள்ளது. உலகின் உயரிய அங்கீகாரமாகக் கருதப்படும் நோபல் பரிசு மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம் மற்றும் அமைதி என 6 முக்கிய துறைகளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, கடந்த 5-ம் தேதி தொடங்கி தினமும் ஒரு துறைக்கு வரும் 12-ம் தேதி வரை பரிசுகள் அறிவிக்கப்படுகின்றன. முதல் கட்டமாக மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இந்த பரிசு 3 பேருக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டது. கார்ல் டீசெரோத், பீட்டர் ஹெகெமன், ஜார்ஜ் நாகல் ஆகியோருக்கு மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு பெல்ஜியத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் ஹால்சனுக்கு வழங்கப்பட்டது. ஐஎஸ்கியூப் நியூட்ரினோ ஆய்வகத்திற்கு இவர் முக்கிய பங்களிப்பு ஆற்றினார். வேதியியல் துறைக்கான நோபல் பரிசு பிரான்சின் ஹென்றி ககன் மற்றும் ஜப்பானின் கென்சோ சோவா ஆகிய ஆய்வாளர்களுக்கு பகிர்ந்து அளிக்கப் படுவதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், இலக்கியத் துறைக்கான நோபல் பரிசு கனடாவை சேர்ந்த ஆனி கர்சனுக்கு வழங்கப்பட்டது. சமகால இலக்கியத்திற்கு புதிய வடிவங்களை உருவாக்கியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# இந்திய விமானி ஸ்மித் மச்சாரை பாராட்டி அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றம்!

ஸ்மித் மச்சாரைப் பாராட்டி அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. துபாயில் இருந்து இஸ்ரேல் சென்ற பயணிகள் விமானத்தை அதன் துணை விமானி ஹமாம் அல் ஹமாமி கடத்த முயன்றதை, இந்திய விமானி ஸ்மித் மச்சார் வீரத்துடன் தடுத்தார். பயணிகள் உதவியுடன் துணை விமானி மடக்கிப் பிடிக்கப்பட்டார். தாக்குதலில் படுகாயமடைந்து ஸ்மித் மச்சார், தற்போது அபுதாபியில் சிகிச்சை பெற்று வருகிறார். இந்தச் சூழலில், ஸ்மித் மச்சாரைப் பாராட்டி அமெரிக்க நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரதிநிதிகள் சபையில் ஜோஷ் காட்ஹைமர், டான் பேகன், மைக்கேல் மெக்கால் ஆகிய எம்.பி.க்கள் இந்த தீர்மானத்தை கொண்டு வந்தனர். விமானப்பயணிகளின் உயிரைக் காக்க ஸ்மித் மச்சார் காட்டிய அசாதாரண தைரியத்துக்கு இந்த தீர்மானம் மூலம் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த சம்பவத்தை பயங்கரவாத செயலாக கண்டித்துள்ள அமெரிக்கா, சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரக அரசுகள் இவ்விவகாரத்தில் முழுமையான விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

(16 பக்கத் தொடர்ச்சி)

## சர்வாதிகாரத்தை கையிலெடுக்கும் அநுர அரசின் 'புதிய பிசாசு'

சில பகுதிகளை ”தடைசெய்யப்பட்ட பகுதிகள்” என அறிவிக்கும் அதிகாரம் அரசிற்கு வழங்கப்படுகிறது. அமைதியான முறையில் மக்கள் போராட்டம் நடத்துவதையும், ஒன்று கூடுவதையும் தடுப்பதற்கு இப் பிரிவுகள் பயன்படுத்தப்படலாம். வழக்கமான பொலிஸ் சோதனைகளைத் தாண்டி, இராணுவம் மற்றும் கடலோரக் காவல் படையினருக்கு சாதாரணப் பிரஜைகளைக் கைது செய்யவும், சோதனையிடவும், தடுத்து வைக்கவும் பரந்த அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. இது நாட்டில் இராணுவத்தின் ஆதிக்கத்தையும் ஜனநாயக மீறல்களையும் அதிகரிக்கச் செய்யும். ஜனாதிபதி அல்லது குறிப்பிட்ட அமைச்சு அதிகாரிகளுக்கு, எந்தவொரு சிவில் அமைப்பு, அரசியல் இயக்கம் அல்லது தொழிற்சங்கத்தையும் ”பயங்கரவாத அமைப்பு” எனப் பிரகடனம் செய்து தடை செய்யும் தன்னிச்சையான அதிகாரம் வழங்கப்படுகிறது.

பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற பெயரில் 48 ஆண்டுகளாக நாட்டில் நடைமுறையிலிருந்த "பயங்கரவாதத் தடைச் சட்டம்" ஏற்படுத்திய வடுக்கள் இன்னும் ஆறவில்லை. இந்நிலையில், "மாற்றம்" என்ற வாக்குறுதியோடு ஆட்சிக்கு வந்த அநுர அரசாங்கம், பழைய சட்டத்தை விடவும் தீவிரமான ஒரு அடக்குமுறைச் சட்டமூலத்தை சட்டப்பூர்வமாக்கத் துடிப்பது ஜனநாயகத்தின் மீதான மற்றுமொரு அச்சுறுத்தலாகும். அரசைப் பாதுகாப்பது என்ற பெயரில் குடிமக்களின் கருத்துச் சுதந்திரத்தையும், போராட்ட உரிமையையும் ஒடுக்கும் எந்தவொரு சட்டமும் நாட்டைப் பாதுகாப்பதாக அமையாது.மாறாக, அது மற்றுமொரு சர்வாதிகாரப் பாதைக்கே வழிகோலும்.

48 ஆண்டுகால வரலாற்றுப் பிழையிலிருந்து இலங்கை பாடம் கற்றுக்கொள்ள வேண்டிய தருணம் இது. ஆனால், பழைய கொடூரச் சட்டத்திற்குப் பதிலாக, அதைவிடக் கடுமையான நிபந்தனைகளுடனும் அதிக அதிகாரங்களுடனும் புதிய சட்டமூலத்தை முன்வைப்பது, அடக்குமுறையின் வடிவத்தை மட்டுமே மாற்றியிருக்கிறதே தவிர, நோக்கத்தை அல்ல. ”பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்” என்பது வெறும் காகித வடிவிலான சட்ட மாற்றம் அல்ல. அது மக்களின் அடிப்படைச் சுதந்திரத்தின் மீது போடப்படும் புதிய விலங்கு. மூவின மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கம் அந்த மக்களுக்கு எதிராக இத்தகைய சட்டங்களை ஆயுதமாகப் பயன்படுத்துவது பெரும் துரோகம்.




# ஈழத்துத் திருக்கோயில்கள்
## (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்: 1217



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலயம்
## புதுக்கல்லடி, மட்டக்களப்பு

புராண வரலாற்றிலும், பக்தர்களுடைய வாழ்க்கையிலும் முருகப் பெருமான் புரிந்துள்ள அற்புதங்கள் எண்ணிலடங்காதவை. கருணையே வடிவமான முருகப் பெருமான், சூரபன்மாதியரை அழித்து, அவர்களை ஆட்கொண்டமை, பேசமுடியாதிருந்த அடியவரைப் பேச வைத்தமை, ஔவைப் பாட்டியோடு தமிழ்ச்சமர் புரிந்தமை போன்ற பல்வேறு நிகழ்வுகள், முருகப்பெருமானின் திருவருட் சிறப்பை எடுத்தக் காட்டுவதாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான முருகப்பெருமான் வேண்டுதலுக்கிணங்க அமைக்கப்பட்ட ஆலயம் புதுக்கல்லடி, மட்டக்களப்பிலுள்ள ஈழத்துத் திருச்செந்தூர் ஆலயமாகும். இவ்வாலயத்திலும் முருகப் பெருமானின் அற்புதங்கள் பல நிகழ்ந்துள்ளன. இவ்வாலய முகப்பிலே திருச்செந்தூர் முருகனின் திருவுருவமும், ஆலயத் தோற்றமும் வரையப்பட்டுள்ளது. இந்த அழகிய, தெய்வீகநிலை பொருந்திய ஓவியத்தை, 1983 ஆம் ஆண்டு, ஓவியர் செல்வம் என்பவர் வரைந்துள்ளார்.

இந்த ஓவியம் வரையப்படும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், ஓவியத்தின் கண்ணைத் திறக்காமல், மதிய உணவிற்காக செல்வம் அவர்கள் வெளியே சென்றிருந்தார். திரும்பிவந்து பார்த்தபோது ஓவியத்தைக் கண்டு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தார். வரையப்பட்டிருந்த ஓவியத்தின் இரு கண்களும் தானாகவே திறக்கப்பட்டிருப்பதைக் கண்டார். இதனைக் கண்ணுற்றவர்களும், கேள்வியுற்றவர்களும் முருகப்பெருமானின் திருவருளை எண்ணிப் புளகாங்கிதம் அடைந்தனர். இந்த அற்புதத்தை நினைவு கூர்ந்ததோடு, இச்சம்பவத்தின் நினைவாக வருடந்தோறும் ஓவியம் கண்திறந்த நாளில் இவ்வாலயத்திலே, "கண்திறந்த விழா" மிகச் சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.

புதக்கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலயம், ஆழ்ந்த அன்பின் வெளிப்பாடாக அமைக்கப்பட்ட ஆலயமாக விளங்குகின்றது. இவ்வாலயத்தின் பிரதான வாயில், மேற்குத் திசையை நோக்கிக் கட்டப்பட்டுள்ளது. இதற்கான காரணத்தை சுவாமிகளிடம் பலர் கேட்டுள்ளனர். அதற்குச் சுவாமிகள், "முருகப்பெருமான், மக்கள் குடியிருக்கும் திசையை நோக்கியிருந்து அருள்பாலிக்க வேண்டும். முருகனுடைய அருள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே எனது நோக்கம். இதனை ஏற்றுக் கொள்ளும் வகையிலேயே, முருகப்பெருமானுடைய ஓவியத்தின் கண்கள் தானாகவே திறந்தன. அதுமட்டுமன்றி எங்கும் நிறைந்து எல்லாத் திசைகளிலும் தெய்வம் காணப்படுகின்றது. தெய்வம் இல்லாத திசையை எவரேனும் கூற முடியுமா" எனப் பதில் அளித்தள்ளார்கள்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பதற்கமைய, இவ்வாலயத்திலே நடந்த நிகழ்வொன்றும், முருகப்பெருமானின் அருளை எடுத்துக்காட்டுவதாகக் காணப்படுகின்றது. இக்கோயில் கட்டிட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது, வாங்கி வைக்கப்பட்டிருந்த பதின்மூன்று சீமெந்து மூட்டைகளை, இரவுநேரத்திலே யாரோ திருடிச் சென்றுவிட்டார்கள். இச்செயலால் சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்கள் பெரிதும் வேதனையுற்றார். அன்றிரவு அவரது கனவிலே முருகன் இளைஞனாகக் காட்சி கொடுத்ததோடு, திருடனையும், சீமெந்தையும் காட்டிக் கொடுத்தார். பின்னர் திருடியவர்களே சீமெந்தை வாங்கி வந்து திருடிய இடத்திலே அடுக்கிவைத்ததோடு, முருகனை வழிபட்டு அவன் பக்தர்களாக மாறினர்.

மட்டக்களப்பிலுள்ள ஈழத்து திருச்செந்தூர் ஆலயத்திலே, வெள்ளிக்கிழமை தோறும் விசேடபூசைகள் நடைபெறும். இவ்வாலயத்திலே தமிழில் அர்ச்சனைகள் நடைபெறுவதோடு, அருளுரைகள், கூட்டுப்பிரார்த்தனைகளும் இடம்பெறும். இவ்வாலயத்தின் நிறுவனராகிய சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்கள், பூசை வழிபாடுகளை நடத்தியதோடு, ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு ஆன்மீக அறிவையும், தெய்வீக உணர்வையும் ஊட்டுவதில் பெரும் பங்களிப்பு செய்துள்ளார்கள். முருகனுக்குரிய விசேட நாட்களாகிய கந்தசஷ்டி நாட்களில், ஆலயத்திலே விசேட நிகழச்சிகள் இடம்பெறும்.

மக்கள் அறிந்த, மக்களுடைய தாய்மொழியாக விளங்குகின்ற தமிழ்மொழியிலே, ஆலயத்தோடு தொடர்புடைய விடயங்கள் இடம்பெறுவது, சைவசமய மறுமலர்ச்சியின் முக்கிய நிலையாகக் காணப்படுகின்றது. அத்தோடு சமய தத்துவங்களை எடுத்தியம்பி, மக்கள் நேர்வழியில் நடைபோட, இவ்வாலயத்திலே நடைபெறும் அருளுரைகள் பேருதவி புரிந்துள்ளன. மக்களிடையே சமய அறிவை ஆழமாக ஊட்டுவதன் மூலம், அழிவுப் பாதையிலிருந்த அவர்களை மீட்டெடுக்க முடியும் என்ற தாரக மந்திரத்தை, மட்டக்களப்பு புதுக்கல்லடி ஈழத்துத் திருச்செந்தூர் ஆலயம், முக்கிய நோக்கமாகக் கொண்டு பணிபுரிந்து வருகின்றது.

இவ்வாலயம் கட்டப்பட்ட முறை, ஆலயத்தின் அமைப்பு, இவ்வாலயத்திலே கடைப்பிடிக்கப்படும் நெறிமுறைகள், விழாக்கள் அனைத்தும் தற்காலத்திலே வேண்டப்படும் முக்கிய நிலையாகக் காணப்படுகின்றது. இவ்வாலயம் மக்களுக்கு மட்டுமல்ல, ஏனைய ஆலயங்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமைந்து, மறுமலர்ச்சியை ஊக்குவிக்கும் ஆலயமாகவும் விளங்குகின்றது.

வளரும்..

# இவ்வார ராசிபலன்

**09-10-2026 வெள்ளி தொடக்கம் 15-10-2026 வியாழன் வரையும்**







**மேஷம்:** மேஷராசி அன்பர்களே! வருமானம் அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். திடீர் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படக்கூடும். மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். உங்கள் வேலைகளில் மட்டுமே கவனம் செலுத்தவேண்டியது முக்கியம். பதவி உயர்வையோ ஊதிய உயர்வையோ தற்போது எதிர்பார்க் கமுடியாது. வியாபாரத்தில் சற்று கூடுதலாக உழைக்கவேண்டி வரும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பங்குதாரர்களும் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பிரச்னை இல்லாத வாரம். புகுந்தவீட்டு உறவினர்கள் அனுசரணையாக இருப்பார்கள். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு எதிர்பார்ப்புகள் ஓரளவு நிறைவேறும். அவசர முடிவுகளைத் தவிர்த்து பொறுமையுடன் செயல்பட்டால் நினைத்த காரியங்கள் அனைத்தும் சாதகமாக நடைபெறும்.

அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, ஆரஞ்சு. அதிர்ஷ்ட எண்: 1, 9.

அதிர்ஷ்ட நாள்: செவ்வாய், ஞாயிறு. இந்த வாரம் மேஷத்திற்கு 9/10 மதிப்பெண்.




**ரிஷபம்:** ரிஷபராசி அன்பர்களே! தேவையான அளவுக்குப் பணம் இருப்பதால் இந்த வாரம் செலவுகளை சமாளிப்பதில் பிரச்னை எதுவும் இருக்காது. செலவுகளும் சுபச்செலவுகளாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் சுபச் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. தந்தைவழி உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், அவர்களுடன் பேசும்போது சற்று எச்சரிக்கையாக இருக்கவும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சற்று இழுபறியான நிலையே காணப்படும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். முக்கியமான ஒரு பிரச்னையை சமயோசிதமாகத் தீர்த்து நிர்வாகத்தினரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். எதிர்பாராத சலுகைகள் கிடைப்பதற்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட லாபம் கூடுதலாகக் கிடைக்கும். பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். சக வியாபாரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரம்தான். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் இருப்பதால் பிரச்னை எதுவும் ஏற்படாது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை திருப்தி தருவதாக இருக்கும். செலவுகளை திட்டமிட்டு கட்டுப்படுத்தினால் இந்த வாரம் பல நன்மைகளை அனுபவிப்பீர்கள்.

அதிர்ஷ்ட நிறம்: பச்சை, வெள்ளை. அதிர்ஷ்ட எண்: 2, 6.

அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, புதன். இந்த வாரம் ரிஷபத்திற்கு 8.5/10 மதிப்பெண்.




**மிதுனம்:** மிதுனராசி அன்பர்களே! பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். அநாவசிய செலவுகள் எதுவும் இருக்காது. உடல் ஆரோக்கியத்தில் மட்டும் கவனம் தேவை. பணியின் காரணமாக சிலருக்கு வெளியூர்ப் பயணம் செல்ல நேரும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. எந்தக் காரணத்தை முன்னிட்டும் கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. அலுவலகத்தில் உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சக பணியாளர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அதிகாரிகளிடம் பேசும்போது பதற்றம் வேண்டாம். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றம் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் சுமுகமான போக்கு ஏற்படும். பங்குதாரர்கள் அனுசரணையாக இருப்பார்கள். ஆனால், கடன் வாங்கி முதலீடு செய்வதைத் தவிர்க்கவும். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். அலுவலகத்தில் சக ஊழியர்களை அனுசரித்து நடந்துகொள்ளவும். அதிக அலைச்சலால் உடல் சோர்வு ஏற்படலாம். போதுமான ஓய்வும் தூக்கமும் அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு போட்டித் தேர்வுகளில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள்.

அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, மஞ்சள். அதிர்ஷ்ட எண்: 5, 9.

அதிர்ஷ்ட நாள்: புதன், ஞாயிறு. இந்த வாரம் மிதுனத்திற்கு 9/10 மதிப்பெண்.




**கடகம்:** கடகராசி அன்பர்களே! எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஒற்றுமை வலுப்படும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு உறவினர்களால் சங்கடங்கள் ஏற்பட் டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் புகழ் பெற்ற புனிதத் தலங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அலுவலகத்தில் உற்சாகமாக உங்கள் பணிகளைச் செய்வீர்கள். ஒரு சிலருக்கு இருக்கும் இடத்தில் இருந்து வேறு ஊருக்கு மாறுதல் கிடைக்கும். அதனால் நன்மையே உண்டாகும். சக ஊழியர்களால் ஏற்பட்ட அவப்பெயர் நீங்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக மிகவும் உழைக்கவேண்டி இருக்கும். வங்கிக் கடனுதவி கிடைக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதுக்கு நிம்மதி உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சலுகைகளும் கிடைக்கும். காதல் உறவுகளில் இருந்த சிறிய மனவருத்தங்கள் நீங்கி உறவு இனிமையாக மாறும். உடல்நலத்தில் பெரிய பாதிப்பு எதுவும் இல்லை என்றாலும், செரிமானம் மற்றும் வயிறு தொடர்பான விஷயங்களில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு எதிர்பார்த்த மதிப்பெண்களைப் பெறுவார்கள்.

அதிர்ஷ்ட நிறம்: வெள்ளை, இளம்பச்சை. அதிர்ஷ்ட எண்: 2, 7.

அதிர்ஷ்ட நாள்: திங்கள், வியாழன். இந்த வாரம் கடகத்திற்கு 8.5/10 மதிப்பெண்.




**சிம்மம்:** சிம்மராசி அன்பர்களே! குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்கு குறைவு எதுவும் இருக்காது. புதிய முயற்சிகளில் யோசித்து இறங்குவது நல்லது. உடல்நலம் சீராகும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் மறைந்து அந்நியோன்யம் ஏற்படும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. தாய்வழி உறவினர்களால் சில பிரச்னைகள் ஏற்படும் என்றாலும் அதனால் பாதிப்பு இருக்காது. வெளியூர்ப் பயணத்தின்போது எச்சரிக்கையாக இருக்கவும். புதிய வேலைக்கு முயற்சி செய்துகொண்டு இருப்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். சில சலுகைகளும் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு லாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமையாக உழைக்கவேண்டி வரும். புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம் இது. அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். அதிக வேலைப்பளுவால் உடல் சோர்வு ஏற்படலாம். போதுமான ஓய்வும் உடற்பயிற்சியும் அவசியம். மாணவர்கள் கல்வியில் சிறப்பாக செயல்பட்டு போட்டித் தேர்வுகளில் நல்ல வெற்றியைப் பெறுவார்கள். தற்பெருமையைத் தவிர்த்து அனைவருடனும் இணக்கமாக நடந்துகொண்டால் இந்த வாரம் நினைத்த காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக நிறைவேறும்.

அதிர்ஷ்ட நிறம்: தங்க மஞ்சள், ஆரஞ்சு. அதிர்ஷ்ட எண்: 1, 3.

அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, செவ்வாய். இந்த வாரம் சிம்மத்திற்கு 9/10 மதிப்பெண்.




**கன்னி:** கன்னிராசி அன்பர்களே! பொருளாதார வசதிக்குக் குறைவில்லை. செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். நெருங்கிய உறவினர்களிடம் பக்குவமாக நடந்துகொள்வதன் மூலம் தேவை யற்ற பிரச்னைகளைத் தவிர்த்துவிடலாம். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். நீண்ட நாள்களாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். வேறு வேலைக்கு இப்போது முயற்சி செய்ய வேண்டாம். அலுவலகத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்லவும். சிலருக்கு பணிநிமித்தமான பயணங்கள் உண்டு. வியாபாரத்தில் புதிய முதலீடுகள் இப்போது வேண்டாம். சக வியாபாரிகளின் பேச்சைக் கேட்டு புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். பங்குதாரர்களின் ஆதரவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு அதிக பொறுப்புகளால் மனதில் சோர்வும் உடல் அசதியும் உண்டாகும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகச் சூழ்நிலை உற்சாகம் தருவதாக இருக்கும். மாணவர்கள் படிப்பில் முழு கவனம் செலுத்தினால் சிறந்த முன்னேற்றம் காண்பார்கள். உடல்நலத்தில் செரிமானம் தொடர்பான சிறிய பிரச்சினைகள் அல்லது உடல் சோர்வு ஏற்படலாம் உணவு முறையிலும் ஓய்விலும் கவனம் செலுத்துங்கள். எந்த முடிவையும் அவசரப்படாமல் நிதானமாக எடுத்தால் வெற்றி உறுதி.

இந்த வாரம் பச்சை நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 5.

அதிர்ஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி. இந்த வார மதிப்பெண்: 88/100.




**துலாம்:** துலாராசி அன்பர்களே! வார முற்பகுதியில் நீங்கள் நீண்டநாள்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்து சேரும். வாரப் பிற்பகுதியில் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பணவரவு அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். குடும்ப விஷயத்தில் மற்றவர்கள் தலையிடுவதை அனுமதிக்காதீர்கள். சிலருக்கு நீண்டநாளாக நிறைவேற்றாமல் விடுபட்ட குலதெய்வப் பிரார்த்த னைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும். அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும் குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் கூடும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சலுகைகள் எதையும் எதிர்பார்க்க முடியாது. மாணவர்கள் கவனத்தை சிதறவிடாமல் படிப்பில் ஈடுபட்டால் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். உடல்நலத்தில் சிறிய சோர்வு அல்லது தலைவலி ஏற்படலாம் போதிய ஓய்வு அவசியம். முதலீடு செய்வதற்கு முன் அனுபவம் வாய்ந்தவர்களின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.

இந்த வாரம் வெள்ளை நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 6.

அதிர்ஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி. இந்த வார மதிப்பெண்: 85/100.




**விருச்சிகம்:** விருச்சிகராசி அன்பர்களே! வார முற்பகுதியில் எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். திருமண வயதில் உள்ள மகன் அல்லது மகளின் திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் உறவினர்களிடம் கௌரவம் அதிகரிக்கும். அரசாங்கக் காரியங்கள் முடிவதில் சற்று இழுபறியான நிலையே காணப்படும் அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாகச் செயல்படுவீர்கள்.

**(தொடர்ச்சி 21 பக்கம்)**

# இவ்வார ராசிபலன்

( 20 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** அதிகாரிகள் அனுசரணையாக இருப்பார்கள். வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்குக் கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும். அலுவலகம் செல்பவர்களுக்கு திருப்தி தரும் வாரம். சலுகைகளும் கிடைக்கும். மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். உடல்நலத்தில் பழைய பிரச்சினைகள் குறைந்து புத்துணர்ச்சி ஏற்படும். முக்கியமான முடிவுகளை நிதானமாக எடுத்தால் எதிர்பார்த்த பலன் கிடைக்கும்.
இந்த வாரம் அடர் சிவப்பு நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 9.
அதிர்ஷ்ட நாட்கள்: செவ்வாய், ஞாயிறு. இந்த வார மதிப்பெண்: 87/100.




**தனுசு:** தனுசுராசி அன்பர்களே! வார முற்பகுதி சுமாராகத்தான் இருக்கும். பிற்பகுதியில் வருமானம் திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு சிறிய அளவில் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படக்கூடும் என்றாலும் உடனே சரியாகி விடும். குடும்பம் தொடர்பான. முக்கிய முடிவுகள் எடுக்கும்போது, பெரியவர்களுடன் கலந்து ஆலோசித்து எடுப்பது நல்லது. வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. கணவன் - மனைவி ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும். சக ஊழியர்களிடம் இணக்கமாக நடந்துகொள்ளவும். அதிகாரிகள் அவ்வப்போது கண்டிப்பு காட்டுவார்கள். வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் அவ்வப்போது லேசான சோர்வு ஏற்படக் கூடும். அலுவலகம் செல்லும் பெண்களுக்கு சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மாணவர்கள் படிப்பில் முழு கவனம் செலுத்தினால் எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும். உடல்நலத்தில் சிறிய சோர்வு அல்லது தூக்கமின்மை ஏற்படலாம் போதிய ஓய்வு அவசியம். பயணங்கள் சாதகமான பலன்களைத் தரும்.
இந்த வாரம் மஞ்சள் நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 3.
அதிர்ஷ்ட நாட்கள்: வியாழன், ஞாயிறு. இந்த வார மதிப்பெண்: 89/100.




**மகரம்:** மகரராசி அன்பர்களே! பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். திருமண வயதில் உள்ள பெண் அல்லது பிள்ளைக்கு திருமண முயற்சிகளை மேற்கொள்ளலாம். பழைய கடன்களைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். உறவினர், நண்பர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்வீர்கள். சிலருக்கு திடீர்ப் பயணங்களும் அதனால் ஆதாயம் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படும். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். ஒரு சிலருக்கு பதவி உயர்வு அல்லது ஊதிய உயர்வு கிடைப்பதற்குமான சந்தர்ப்பம் கனிந்து வரும். வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், தகுந்தவர்களிடம் ஆலோசனை கேட்டு செய்யவும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். உடல்நலத்தில் மூட்டு வலி அல்லது உடல் சோர்வு இருந்தால் அலட்சியம் செய்யாமல் கவனித்துக் கொள்ளுங்கள். புதிய முதலீடுகளை நிதானமாக ஆராய்ந்து முடிவு செய்வது நல்லது.
இந்த வாரம் நீல நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 8.
அதிர்ஷ்ட நாட்கள்: சனி, புதன். இந்த வார மதிப்பெண்: 88/100.




**கும்பம்:** கும்பராசி அன்பர்களே! பொருளாதார நிலை நல்லபடி இருக்கும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் ஏற்படும். எதிர்பாராத பயணங்களும் அதனால் உடல் அசதியும் மனச்சோர்வும் உண்டாகும். உங்களைப் பற்றித் தவறாகப் புரிந்துகொண்ட நண்பர்கள், தங்கள் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்பார்கள். அவர்களால் ஆதாயமும் உண்டாகும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும். சக பணியாளர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்வார்கள். ஒரு சிலருக்கு அவர்கள் விரும்பியபடி இட மாறுதல் கிடைக்கும். வியாபாரத்தின் காரணமாக சிலர் தொலைதூர பயணங்களை மேற்கொள்ள நேரும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். சக வியாபாரிகளிடையே இணக்கமான சூழ்நிலை உண்டாகும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உறவினர்கள் வருகையால் பொறுப்புகள் அதிகரிக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் சில சலுகைகள் கிடைக்கும். உடல்நலத்தில் சிறிய சோர்வு அல்லது தூக்கமின்மை ஏற்படலாம் ஓய்விற்கு முக்கியத்துவம் கொடுங்கள். புதிய முயற்சிகளை தன்னம்பிக்கையுடன் தொடங்கினால் வெற்றி நிச்சயம்.
இந்த வாரம் இளநீல நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 4.
அதிர்ஷ்ட நாட்கள்: சனி, புதன். இந்த வார மதிப்பெண்: 89/100.




**மீனம்:** மீனராசி அன்பர்களே! பொருளாதார நிலைமை திருப்தி தருவதாக இருக்கும். கணவன் - மனைவிக்கி டையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி மகிழ்ச்சி உண்டாகும். குடும்ப விஷயமாக வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ள வேண்டி வரும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். மகன் அல்லது மகளின் திருமண முயற்சிகளில் ஈடுபட சாதகமான வாரம். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவைப்படும். அலுவலகத்தில் திருப்திகரமான போக்கே காணப்படும். வேறு வேலைக்குச் செல்ல விரும்புபவர்கள் அதற்கான முயற்சிகளில் இப்போது ஈடுபடலாம். நல்ல வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். சிலர் வாடகை இடத்தில் இருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றி விரிவுபடுத்துவீர்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம். வேலைக்குச் செல்லும் பெண்கள் அலுவலகத்தில் கூடுதல் வேலை செய்யவேண்டி இருக்கும் உடல்நலத்தில் சிறிய அலர்ஜி அல்லது சளி தொடர்பான பிரச்சினைகள் தோன்றலாம் உணவு மற்றும் ஓய்வில் கவனம் செலுத்துங்கள். முக்கியமான முடிவுகளை நம்பிக்கையுடன் எடுத்தால் நல்ல பலன் கிடைக்கும்.
இந்த வாரம் மஞ்சள் நிறம் அதிர்ஷ்டத்தை தரும். அதிர்ஷ்ட எண்: 7.
அதிர்ஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி. இந்த வார மதிப்பெண்: 90/100.

---

# மாங்குளம் மகாவித்தியாலய மாணவர்களை ஏற்றிச் மாணவர்களை ஏற்றிச் செல்ல மறுத்த பேருந்து!

## அதற்கெதிராக எடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கை!




முல்லைத்தீவு மாவட்டம், துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாங்குளம் மகாவித்தியாலய மாணவர்களை ஏற்றிச் செல்ல மறுத்ததாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை துரிதமாக நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த பேருந்து இலங்கை போக்குவரத்துச் சபை கண்டி சாலைக்குரியது என அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ஊடாக உரிய பிராந்திய முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட சாரதியை தற்காலிகமாகப் பணியிலிருந்து இடைநிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் பனிக்கன்குளம், கிளவன்குளம் மற்றும் திருமுறிகண்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் தொடர்பில் பேருந்து சேவை வழங்கப்படாததாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பான தகவல்கள் வெளியாகியிருந்தன. குறிப்பாக, பாடசாலை முடிவடைந்த பின்னர் ஆசிரியர்களும் மாணவர்களும் பேருந்துக்காகக் காத்திருந்த நிலையில், இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பேருந்தொன்று ஆசிரியர்களை ஏற்றிச் சென்றபோதும் மாணவர்களை ஏற்ற மறுத்ததாகவும், பேருந்தில் ஏறிய மாணவி ஒருவர் தவறி விழ நேரிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் ஊடகங்களில் வெளியான தகவல்கள் தொடர்பாக உடனடியாக கவனம் செலுத்திய வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன், விடயத்தை இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவரின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் குறித்த பேருந்து கண்டி இலங்கை போக்குவரத்துச் சபை சாலைக்குரியது என அடையாளம் காணப்பட்டதுடன், அச்சாலையின் பிராந்திய முகாமையாளர் ஊடாக சம்பந்தப்பட்ட சாரதியை தற்காலிகமாகப் பணியிலிருந்து இடைநிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பான போக்குவரத்தும், அவர்களின் கல்வி நடவடிக்கைகள் தடையின்றி நடைபெறுவதும் பொது போக்குவரத்துச் சேவையின் முக்கியப் பொறுப்பாகும் எனத் தெரிவித்த அதிகார சபையின் தலைவர், மாணவர்கள் உள்ளிட்ட பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் எந்தவொரு செயற்பாட்டையும் அதிகார சபை பொறுத்துக்கொள்ளாது எனவும் குறிப்பிட்டார்.

பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் விதிமீறல்கள், பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் அல்லது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான செயற்பாடுகள் தொடர்பில் 071 9090900 என்ற வட்ஸப் இலக்கத்துக்கு ஆதாரங்களுடன் முறைப்பாடுகளை அனுப்புமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஒளிப்படங்கள் அல்லது காணொலிகள் போன்ற ஆதாரங்களையும் இணைத்து அனுப்ப முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524






29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்








உதயம் 1592 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday October 9, 2026


# கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் வெளியிடப்பெற்ற சிவாச்சாரியப் பெருமக்களுக்கு பயனுள்ள இரு தொகுப்பு நூல்கள்!



கடந்த 04-10-2026 அன்று ஞாயிற்றுக்கிழமை அன்று கனடா கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் ஆலயத்தின் அறங்காவல் சபைத் தலைவர் திரு சுப்பிரமணியம் முத்துராஜலிங்கம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நூல்வெளியீட்டு விழாவில் சமஸ்கிரதம் மற்றும் தமிழ் மொழியில் எழுதப்பெற்றதும் சிவாச்சாரியப் பெருமக்களுக்கு பயனுள்ளதுமான “சகல தேவதா மஹோத்ஸவப பத்ததி” என்னும் தொகுப்பு நூலும் மற்றும் வரலாற்று தொகுப்பு நூலான “கிழக்கிலங்கை ஆதிசைவ சிவப்பிராமணர் வரலாறு” என்னும் நூலும் வெளியிடப்பெற்றன. அன்றைய விழாவில் மேற்படி நூல்களை தொகுப்பதற்கு பக்க உதவியாக இருந்த “கலாபூசணம்” பிரம்மஸ்ரீ சிவானந்த சர்மா அவர்களுக்கு “தேவபாஷா துரந்தர்” என்னும் பட்டத்தை சிவஸ்ரீ எம்.ஐ யோகச்சந்திர சர்மா வழங்கியபோது அனைத்து சிவாச்சாரியப் பெருமக்களும் மேடையில் மகிழ்ச்சியுடன் மேடையை அலங்கரித்தனர்.

# வயலின் வித்தகர் ஜெயதேவன் நாயரின் "சரிகா" இசை மற்றும் கலை நிறுவனத்தின் 25வது ஆண்டு விழா!







கனடாவின் பிரபல வயலின் வித்துவான் “வித்தகர் “ஜெயதேவன் நாயரின் “சரிகா” இசை மற்றும் கலை நிறுவனத்தின் 25வது ஆண்டு விழா கடந்த 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ “சீனக் கலாச்சார“ மண்டபத்தில் நடைபெற்றது.

அன்றை தமது நிறுவனத்தின் “வெள்ளி விழா“வில் தனது வெற்றிகரமான கலைப் பயணத்திற்கு ஆத்மார்த்தமான ஆதரவை வழங்கிய அனைவரையும் மேடைக்கு அழைத்து கௌரவித்து மகிழ்ந்தார் ஜெயதேவன் நாயர்.

மேற்படி கௌரவிப்பு நிகழ்வில் ஆரம்பத்தில் அழைக்கப்பட்டவர்களாகவும் விளங்கியவர்கள் திருவாளரகள் சட்டத்தரணி நாதன் ஸ்ரீதரன், தொழிலதிபர் வைரமுத்து சொர்ணலிங்கம், மிருதங்க வித்துவான் வாசுதேவன் இராஜலிங்கம், நடனக் குரு வாசு சின்னராசா, மிருதங்கக் கலைஞர் கௌரி சங்கர் மற்றும் நடனக் கலைஞர் திருமதி லதா பதா அவர்கள் ஆகியோர் ஆவர். இவர்களை விட மேலும் பலர் அங்கு கௌரவிக்கப்பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது




# சர்வாதிகாரத்தை கையிலெடுக்கும் அநுர அரசின் "புதிய பிசாசு"

### அதுதான் "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்"

“இலங்கையில் 48 ஆண்டுகள் நீடித்த பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பது வெறும் சட்டப் பிரிவு அல்ல.அது பல ஆயிரக்கணக்கான மனிதர்களின் இரத்தமும் கண்ணீரும், வேதனையும் ஈடு செய்யமுடியாத வலிகளும் இழப்புகளும் நிறைந்த ஒரு கறுப்பு வரலாறு. இக்கொடூரச் சட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று எதிர்பார்த்த மக்களுக்கே அநுர அரசு கொண்டுவரும் ”பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்” என்ற புதிய பிசாசு மீண்டும் ஒரு பேராபத்தின் தொடக்கமாக அமையப்போகின்றது““ இந்தச் சட்டம் மக்களைக் காப்பாற்றுவதற்கு அல்ல. அநுரவின் அரசாங்கத்தைக் காப்பாற்றவே எனபதை தமிழ் சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்! -----கே.பாலா

(தொடர்ச்சி 16ம் பக்கம்)

# அவுஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் 6 சிறுமிகளை பாலியல் வன்புணர்ந்த இலங்கைத் தேரருக்கு 13 ஆண்டுகள் சிறை!



அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் சிறுமிகளை பாலியல் வன்புணர்ந்த குற்றம் இலங்கையில் பிறந்த பௌத்த தேரர் ஒருவருக்கு 13 ஆண்டுகள் மற்றும் இரண்டு மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னில் உள்ள விகாரை ஒன்றில் ஆறு சிறுமிகளை பாலியல் வன்புணர்ந்த குற்றம் நிருபிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மெல்பேர்னில் உள்ள தம்ம சரண விகாரையின் **(Dhamma Sarana)** விகாராதிபதியான 71 வயது நாவட்டுன்னே விஜித **(Naotunne Vijitha)** தேரருக்கு, விக்டோரியா கவுண்டி நீதிமன்றம் தண்டனை விதித்ததாக அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (தொடர்ச்சி 14ம் பக்கம்)


MORTGAGE
FINANCIAL SOLUTIONS
COMMERCIAL
RESIDENTIAL
VACANT LAND
INDUSTRIAL
CONSTRUCTION
OUR SERVICE
Purchase
Builder Purchase
MLS Purchase
Private Purchase
Equity line of Credit
Refinance
Renewal
CALL US
NESAN
416-908-5656
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
www.nesan.ca
WE DEAL WITH ALL BANKS
CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332
Scotiabank
FIRST NATIONAL
FINANCIAL LP
TD Canada Trust
Manulife
NATIONAL BANK
Desjardins
RFA
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages
55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8



Photo: Alamy Stock Photo

# ஒலிவியா செளவை மீண்டும் ரொறன்ரோ மாநகர மேயராகத் தேர்ந்தெடுப்போம்!

## ஒக்டோபர் 26, திங்கட்கிழமை அவருக்கு உங்கள் வாக்கைப் பதிவு செய்யுங்கள்!

2009-ஆம் ஆண்டு தமிழ் சமூகம் நீதிக்காகக் குரல் கொடுத்தபோது, ஒலிவியா செளவும் ஜக் லேட்டனும் எம்மோடு உறுதியாகத் துணை நின்றார்கள். அன்று முதல் இன்று வரை, எமது சமூகத்தின் குரலாகவும் நல்வாழ்வுக்கான பலமாகவும் அவர் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றார். எமது சமூகத்திற்கான அவரது முக்கிய திட்டங்கள்:

- **நிரந்தரத் தமிழ்ச் சமூக மையம் அமைத்தல்.**
- **2028-ஆம் ஆண்டுக்குள் ஸ்காபரோவில் தமிழின அழிப்பு நினைவகம் நிறுவுதல்.**

### இளையோரின் முன்னேற்றத்திற்காக

- அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் இலவச மதிய உணவு.
- புதிய விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு மையங்கள்.
- இளையோருக்கான புதிய வேலைவாய்ப்புகள்.
- வாரத்தின் 7 நாட்களும் இயங்கும் நூலகங்கள்.

### முதியோரின் நல்வாழ்விற்காக

- முதியோர்கள் தங்கள் வீடுகளிலேயே சுதந்திரமாக வாழ்வதற்கான உதவிகள்.
- இலவச வீட்டுப் பராமரிப்பு மற்றும் நடமாடும் மருத்துவச் சேவைகள்.
- 28,000 முதியோர்கள் பயனடையும் சிறப்புச் சமூகத் திட்டங்கள்.

### வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காக

- தொடர்ந்து 4-வது ஆண்டாக ரொறன்ரோ பொதுப்போக்குவரத்துச் சேவை (TTC) கட்டண உயர்வு இல்லை!
- வாரத்திற்கு 10 முறை ரி.ரி.சி.யில் (TTC) பயணித்தால், அந்த வாரத்தின் எஞ்சிய அனைத்துப் பயணங்களும் முற்றிலும் இலவசம்!

**MONDAY, OCT 26 RE-ELECT OLIVIA CHOW MAYOR**

OLIVIACHOW.CA #9 ON BALLOT